KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 24 ஜனவரி 2025 இதழ்:- 04

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: TK பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## யாழ்ப்பாணத்தில் முன்வரிசையில் இருந்த பெண் அமைச்சரை துரத்திய இந்தியத் தூதரகஅதிகாரி



இந்திய தூதரக அதிகாரிகளால் பெண் அமைச்சர் அவமதிக்கப் பட்டமை சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது. இந்திய தூதரகம் இவ்விடயத்தினால் அல்லாட தொடங்கியுள்ளது.

மகளிர் சிறுவர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தேசிய தைப்பொங்கல் விழாவில் நிகழ்வின் ஆரம்பம் முதல் முன் (7ம்பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண கலாசார மையம் திருவள்ளுவர் கலாசார மையமாக மாறியது ஏன்? திகைக்கும் தமிழ் ஆர்வலர்கள்?




## தையிட்டி விகாரையை சிங்கள மக்கள் பௌத்த ஆலயமாகப் பார்க்க வேண்டாம் சட்டவிரோதக் கட்டிடமாகவே பார்க்க வேண்டும்! காணி உரிமையாளர்கள் கோரிக்கை!

தையிட்டியில் உள்ள மக்கள் தங்கள் பூர்வீக நிலத்திற்காக தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அவர்களில் சுகுமாரியும் ஒருவர். பார்ல் அமைப்பு கடந்த டிசம்பரில் அவரை சந்தித்த போது அவர் ஒரேயொரு வேண்டுகோளை மாத்திரம் விடுத்தார் அதாவது தனது கதையை தென் பகுதி மக்களிற்கு தெரிவிக்க வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள். அதன் மூலம் தனது போராட்டத்தை தென்பகுதி மக்கள் முழுமையாக புரிந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்தார். (5ம்பக்கம் பார்க்க)





## பல்லினத் தன்மையைக் கட்டியெழுப்புவதில் கனடா உலகுக்கு முன்மாதிரி! தைப்பொங்கல் திருநாள் நிகழ்வில் கனடாப் பிரதமர் உரை!

கனடாவில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் தமிழர் மரபுரிமை மாதத்தின் சிறப்பு குறித்து சுட்டிக் காட்டியிருக்கும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உலகளாவிய (3ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*






## PROFESSIONAL AGENT!
## PREMIER RESULTS !!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com
**Bus: 416-289-3333**


RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers
885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Warden/Finch**

Scarborough $449,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


**Eglinton/Markham**

Scarborough $475,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Renovated throughout the years

**Westney Rd / Kingston Rd**

Ajax $489,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Closer to Highway 401

**Markham / Ellesmere**

Scarborough $529,990
1+1 Beds • 2 Baths • 4 Rooms
Brand New Penthouse unit

**Mccowan & Hwy 401**

Scarborough $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

**Kennedy / 401**

Scarborough $599,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Corner unit offers a prime location


**Markham & 14th Avenue**

Markham $649,000
2+1 Beds • 2 Baths • 5 Rooms
Open-concept living and dining


**Cornell Meadows / 9th Line**

Markham $668,000
2 Beds • 3 Baths • 7 Rooms
Upgraded floor, Newly renovated

**Markham & Sheppard**


Scarborough $679,900
3+1 Beds • 1 Baths • 6 Rooms
New Laminate Floors Throughout

**Altona & Finch**

Pickering $789,900
3 Beds • 4 Baths • 8+2 Rooms
Freehold Townhouses

**Guildwood Village**

Scarborough $999,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Basement with separate entrance

**Markham & Ellesmere**

Scarborough $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


**Morningside/Mcnicol**

Scarborough $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

**Simcoe / Winchester**

Oshawa $1,149,000
4 Beds • 4 Baths • 8 Rooms
Easy access to the new 407

**Glen Dhu Dr/Flint Cres**

Whitby $1,188,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Over $130k on Renovations

**9th Line/Hoover Park**

Stouffville $1,339,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Beautifully Landscaped Exterior

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# பல்லினத் தன்மையைக் கட்டியெழுப்புவதில் கனடா உலகுக்கு முன்மாதிரி! கனடாவில் தைப்பொங்கல் திருநாள் நிகழ்வில் கனடாப் பிரதமர் உரை!



கனடாவில் பிரகடனப்படுத்தப்பட்டி ருக்கும் தமிழர் மரபுரிமை மாதத்தின் சிறப்பு குறித்து சுட்டிக் காட்டியிரு க்கும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உலகளாவிய ரீதியில் சகல ரையும் உள்ளடக்கிய பல்லினத் தன்மையைக் கட்டியெழுப்புவதில் கனடா சிறந்ததொரு முன்மாதிரியாகத் திகழ்வதாகத் தெரிவித்தார்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு டொரன்டோவில் அமைந்துள்ள றிச்ட் மண்ட்ஹில் விநாயகர் ஆலயத்தில் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூஜை வழிபாடுகள் மற்றும் தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இதன் போது தமது அழைப்பை ஏற்று தைப்பொங்கல் தினத்தன்று வருகை தந்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நன்றி தெரி வித்த முடிக்குரிய பூர்வீகக்குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங் களுக்கான அலுவல்கள் அமைச்சர்ஹரி ஆனந்தசங்கரி, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனடாவுக்கும், ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஆற்றிய பணிகளுக் கும் தனது நன்றியை வெளிப்படுத் தினார்.

அதேவேளை தைப்பொங்கல் பண்டி கையைக் கொண்டாடும் சகலருக்கும் வாழ்த்துத் தெரிவித்த உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழ் மரபுரிமை மாதத்தின் சிறப்பு மற்றும் அவசியம் குறித்து சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் சகலரையும் உள்ளடக்கிய பல்லினத் தன்மையைக் கட்டியெழுப்பு வதில் கனடா சிறந்ததொரு முன் மாதிரியாகத் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு கனடாவில் அனைத்தும் சீராக இருக்கிறது என்று கூற முடி யாது எனத் தெரிவித்த ஜஸ்டின் ட்ரூடோ, இருப்பினும் அனைத்தும் சிறந்த முறையில் நிர்வகிப்பதையும் கட்டியெழுப்புவதையும் முன்னிறுத்தித் தாம் தொடர்ந்து செயலாற்றி வருவ தாகக் கூறினார்.

# முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா, மைத்திரி, மகிந்தா வசிக்கும் வீடுகளின் பெறுமதியை வெளிப்படுத்திய அநுர!

முன்னாள் ஜனாதிபதிகளிற்கு வழங்க ப்பட்டுள்ள ஆடம்பர உத்தியோக பூர்வ வாசல்ஸ்தலங்களினால் அர சாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க மீண்டும் கருத்து வெளி யிட்டுள்ளார்.

தொலைக்காட்சி பேட்டியொன்றில் கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் வழங்கிய வீட்டிலேயே வசிக்கின்றார் அந்த வீட்டின் மாதாந்த வாடகை பெறுமதி 2 மில்லியன் ரூபாய் என தெரி வித்துள்ள ஜனாதிபதி அதே போன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் 0.9மில்லியன் ரூபாய் இல்லத்தில் வசிக்கின்றார் என குறிப் பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறித்து சில நாட்களிற்கு முன்னர் தெரிவித்த கருத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வசிக்கும் வீட்டின் வாடகை பெறுமதி மாதம் 4.6 மில்லியன் என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சில தலைவர்கள் தங்களிற்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை மீள ஒப்படைத்துள்ளனர் என குறிப் பிட்டுள்ள ஜனாதிபதி அரசாங்கம் வழங்கிய இல்லத்தினை ஏற்க மறுத்த மைக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு நன்றியை தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது உத்தி யோகபூர்வ இல்லத்தை சமீபத்தில் மீள



கையளித்தார் என ஜனாதிபதி தெரி வித்துள்ளார். முன்னாள் பெண்மணி ஹேமா பிரேமதாசவும் தனக்கு வழங்க ப்பட்ட வீட்டை சில காலத்திற்கு முன்னர் திருப்பி ஒப்படைத்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளிற்கு உத்தி யோகபூர்வவாசல் ஸ்தலத்தை வழங்கு வதை அரசாங்கம் விலக்கிக் கொள் ளுமா என்ற கேள்விக்கு பதிலளித் துள்ள ஜனாதிபதி அரசியல் பிரமுகர் களிற்கான தேவையற்ற செலவீனங் களை குறைப்பது குறித்து அரசாங் கம் உறுதியுடன் இருப்பதாக தெரி வித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க நெல்லை களஞ் சியப்படுத்த வேண்டுமானால் நுகர் வோர் அலுவல்கள் அதிகார சபை யிலும், நெற் களஞ்சியப்படுத்தல் அதிகாரசபையிலும் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத எவரு க்கும் நெல்லை களஞ்சியப்படுத்த முடியாது. சட்டத்தை மீறினால் அரிசி ஆலைகள் இராணுவத்தின் பொறுப்பில் எடுக்கப்படும். நாம் எதிர்காலத்தில்உரிய முறையில் திட்ட மிட்டு செயல்பட உள்ளோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியின் ஒன்றின் நேர்காணலில் கலந்து கொண்ட ஜனாதிபதியிடம்,

தற்போது நாட்டில் எழுந்துள்ள அரிசி தட்டுப்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் சம்ப ந்தமாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தமிழரசுக்கட்சியில் அரசியலமைப்பு வரைவுக்காக தலைவர் சிவஞானம் தலைமையில் 7பேர் கொண்ட குழு நியமனம்!

இலங்கை தமிழ் அரசு கட்சி இறுதியாக கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் நிபுணர் குழுவுக்கு சமர்ப்பித்த அரசியலமைப்பு வரைவினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக உள்ளடக்கங்களை ஆராய்வதற்காக கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவானது, கட்சி மட்டத்திலும் துறைசார்ந்த நிபுணர்கள் மட்டத்திலும் ஆராய்ந்து மேம்பட்ட வரைவினை இறுதி செய்ததன் பின்னர் அடுத்த கட்டமாக தமிழ் தேசியப் பரப்பில் உள்ள ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தமிழ் அரசு கட்சி தயாராகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 18 ஜனவரி 2025 திருகோணமலையில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அறிவித்தார். அவர் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,

ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அதற்காக அந்தந்த மாவட்டங்களில் இருந்து முறைப்பாடுகளை பெற்றுக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதலில் அவர்களிடத்தில் விளக்கம் கோரப்பட்டு அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு வெளியே சென்று வேறு சின்னங்கள், சுயேட்சைகளில் போட்டியிட்டவர்களை வர்த்தமானியுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களை நீக்குவதற்கு முடிவினை எடுத்துள்ளோம். அவர்களுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக தமிழ்க் கட்சிகள் சேர்ந்து உரையாடுவது சம்பந்தமாக கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் கடந்த காலங்களில் கட்சியால் தயாரித்து முன் வைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான வரைவுகள் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது.

எமது கட்சி உருவாக்கப்பட்டதே ஆட்சி முறைமை மாற்றத்துக்காகவாகும். அதனை அடைவதே எமது இலக்காக உள்ளது. சமஷ்டிக் கட்சி என்ற பெயரைக் கொண்ட நாங்கள் சமஷ்டித் தீர்வொன்றையே வலியுறுத்துவோம். அதனையே முன்னகர்த்துவோம்.

காலத்துக்குக் காலம் அரசியலமைப்புச் செயற்பாடுகள், அதிகாரப் பகிர்வுச் செயற்பாடுகள் உள்ளிட்டவற்றில் நாங்கள் பங்கு பற்றியுள்ளோம். இறுதியாக 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிபுணர்கள் குழுவுக்கு எமது தீர்வுத் திட்டத்தினை அனுப்பியுள்ளோம்.



2021இல் நாம் அந்த திட்டத்தினை நிபுணர்கள் குழுவிடத்தில் சமர்ப்பித்துள்ளோம். அந்த அடிப்படையில் குறித்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எம் மத்தியில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் உள்ளார்கள். அவர்களின் ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

அதற்காக ஏழு பேர் கொண்ட குழுவொன்று கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் கட்சியின் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம், துரைராஜசிங்கம், கேசவன் சயந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக ஆராய்வினைச் செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். அதன் பின்னர் இக்குழுவினரே தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஏனைய கட்சியினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளில் பங்கேற்கும் என்றார்.

அதற்கு மேலதிகமாக கட்சி சம்பந்தமான வழக்குகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. ஒரு வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதிக்கும் பிறிதொரு வழக்கு எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிக்கும் திகதியிடப்பட்டுள்ளது. அதேநேரம், குறித்த வழக்குகளை தீர்ப்பது சம்பந்தமாக எழுத்து மூலமான எனது யோசனை மத்தியகுழுவுக்கு கடந்த ஆண்டு ஜீன் மாதம் சமர்ப்பிக்கப்பட்டு ஜீலையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் ஏனைய தரப்பினரின் சட்டத்தரணிகளால் அந்த விடயம் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாமையில் இன்னமும் வழக்குகள் இழுபறியாக உள்ளது. ஆகவே ஏனைய தரப்பினரும் மத்திய செயற்குழு அனுமதியளித்த விடயத்தினை ஏற்றுக்கொண்டால் வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

வழக்கு தாக்கலின் அடிப்படை என்னவென்றால், கடந்த வருடம் ஜனவரி 21ஆம் மற்றும் 27ஆம் திகதி பொதுச்சபை கூட்டப்பட்ட போது (5ம் பக்கம் பார்க்க)





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300

Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA

Post Graduate Diploma In Business Management

Federal Government Registered & Certified (BIA)


Insolvency Counsellor.

Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832

Email: info@creditrecoverycanada.ca



# தையிட்டி விகாரையை சிங்கள மக்கள் பௌத்த ஆலயமாகப் பார்க்க வேண்டாம் சட்டவிரோதக் கட்டிடமாகவே பார்க்க வேண்டும்!

தையிட்டியில் உள்ள மக்கள் தங்கள் பூர்வீக நிலத்திற்காக தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அவர்களில் சுகுமாரியும் ஒருவர் .பார்ல் அமைப்பு கடந்த டிசம்பரில் அவரை சந்தித்த போது அவர் ஒரேயொரு வேண்டுகோளை மாத்திரம் விடுத்தார் அதாவது தனது கதையை தென் பகுதி மக்களிற்கு தெரிவிக்க வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள்.

அதன் மூலம் தனது போராட்டத்தை தென்பகுதி மக்கள் முழுமையாக புரிந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்தார்.





நான் சுகுமாரி சாருஜன் தையிட்டி யாழ்ப்பாணம். எங்கள் பகுதியில் அரசாங்கத்தை சேர்ந்தவர்களும் இராணுவ அதிகாரிகளும் பெரும் அநீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பெரும் குழப்பம் நிலவுகின்றது.

1925 முதல் தமிழர்கள் தங்களின் தாயகமாக கருதி வந்த நிலத்தை இராணுவ மோதல்களின் போது 1990களில் இராணுவம் கைப்பற்றியது .அதனை உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றியது.

2015இல் இடம்பெற்ற மீள்குடியேற்றத்தினை மீள்குடியேற்றம் என தெரிவிக்க முடியாது. எங்கள் நிலத்தின் ஒரு பகுதியை அவர்கள் மீள கையளித்த போதிலும் சுமார் பத்து ஏக்கர் நிலத்தினை அவர்கள் கையளிக்கவில்லை. அதனை இராணுவம் தன்வசப்படுத்தியது.

இந்த நிலத்தில் அன்பு இரக்கம் கருணை சமத்துவம் போன்றவற்றை போதிக்கும் புத்தரின் பெயரினால் பெரும் பௌத்த ஆலயத்தை நிறுவியுள்ளதுடன் மதவழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

பல தரப்பினருக்கும் அழுத்தங்களை கொடுத்துள்ள போதிலும் நீதிக்காக பரப்புரை செய்துள்ள போதிலும் நீதியென்பது கிட்டாத விடயமாக காணப்படுகின்றது.

சிங்கள மக்களின் எதிர்ப்பே எங்கள் நிலத்தை மீள வழங்குவதற்கு தடையாக உள்ளது என அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த நிலத்தினை விடுவித்தால் தென்பகுதியில் அமைதியின்மை உருவாகும் என தெரிவிக்கின்றனர்.

எங்களால் இதன் பின்னால் உள்ள காரணத்தை விளங்கிக் கொள்ள முடியவில்லை? எங்கள் நிலத்தை மீள வழங்குவது குறித்து ஏன் சிங்களவர்கள் கரிசனை கொள்ள வேண்டும்? போதிய புரிந்துணர்வின்மை காரணமாகவே இவ்வாறான கருத்துக்கள் வெளியாகின்றன.

அவர்கள் தென்பகுதியில் இந்து ஆலயங்கள் உள்ளன என தெரிவிக்கின்றனர். ஆனால் இந்து ஆலயங்களை பலவந்தமாக தனியார் நிலங்களில் நிர்மாணிக்கவில்லை. ஆலயங்களிற்கு சொந்தமான நிலத்திலேயே அவற்றை நிர்மானித்துள்ளனர்.

வடக்கில் . விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற போதிலும் நயினாதீவு நாகவிகாரை எந்த சேதமும் இன்றி பாதுகாக்கப் பட்டது. யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு பௌத்தர்கள் செல்வதற்கு நாங்கள் எந்த குழப்பத்தையும் விளைவிப்பதில்லை. நாங்களும் இந்த ஆலயங்களிற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றோம்.

ஆனால் தையிட்டியில் உள்ள பௌத்த ஆலயம் சட்டவிரோதமாக எந்த முன் அனுமதியும் இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மக்களை ஏமாற்றும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பார்ள் அமைப்பின் ஊடாக நாங்கள் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களிற்கு விடுக்கும் வேண்டுகோள் இது.

எங்களை எவரும் கண்மூடித்தனமாக நம்பவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கவில்லை. எங்கள் கோரிக்கைகளை உறுதி செய்யக்கூடிய உறுதிகள் உட்பட அனைத்து ஆவணங்களும் எங்களிடம் உள்ளன.

இது தவிர பிரதேச செயலாளர் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய கடிதம் எங்களிடமுள்ளது. இந்த நிர்மாணம் சட்டவிரோதமானது என உறுதி செய்து பிரதேச செயலாளர் தயாரித்த அறிக்கையும் எங்களிடம் உள்ளது.

இந்த அறிக்கைகளை தென்பகுதி மக்களிடம் கொண்டு சென்று அவர்களிற்கு தெளிவுபடுத்துமாறு நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கின்றோம்.

தென்பகுதி சிங்கள மக்கள் இதனை பௌத்த ஆலயமாக பார்க்க கூடாது சட்டவிரோத கட்டிடமாகவே பார்க்கவேண்டும் என்பதே எங்கள் வேண்டும் அதனை இடிக்க வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கவில்லை என்றார்.

# அர்ச்சுனாவைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு!

யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் 21 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் இன்றைய தினம் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் விளக்குகளை ஒளிரச் செய்து தனது வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார்.

இதன் போது போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் அர்ச்சுனாவின் வாகனத்தை நிறுத்தி அவரது தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கோரியுள்ளனர். பின்னர், அர்ச்சுனா ஆவணங்களை வழங்க மறுத்து பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து, போக்குவரத்து சட்டங்கள் மற்றும் குற்றவியல் நடைமுறைகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்காக சென்றவேளை, அங்கீகரிக்கப்படாத விஜபி விளக்குகள் பொருத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தை போக்குவரத்து காவல்துறையினர் தடுத்து நிறுத்திய போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.



சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினரால் கூறப்பட்ட சில கருத்துக்கள் குறித்தும் அவை சமூகங் களுக்கிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் அமைந்தவையா என மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் 19 ஜனவரி 2025ஞாயிற்றுக்கிழமை தனது 75ஆவது வயதில் காலமானார். இவர் ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியராக கடமையாற்றினார்.

1949 ஜீன் 26ஆம் திகதி பிறந்த இவர் கட்டு கஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான வர்ணனைக்கு பெயர் பெற்ற இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அவருக்கு பரவலான மரியாதையைப் பெற்றுத் தந்தது.

ராவய பத்திரிகை தொடங்கப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

1971 இளைஞர் கிளர்ச்சி தொடர்பான பிரதான நீதிமன்ற வழக்கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந்தார். சந்தேகத்துக்குரிய அனைத்து பிரதிவாதிகளிலும் மிகவும் வண்ண மயமான நபர் என்று நீதிபதிகள் குழு அவரை விவரித்தது. விசாரணையின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைவாசத்தின் போது அவர் ஜே.வி.பி.யின் கோட்பாட்டையும் மார்க்ஸியத்தின் கோட்பாட்டையும் கை விட்டார். வன்முறைக் கோட்பாட்டை நிராகரித்த அவர், மகாத்மா காந்தி விளக்கிய அகிம்சை தத்துவத்தை ஏற்றுக் கொண்டு அதனை தீவிரமாகப் பின்பற்றுபவராக மாறினார்.

தெற்கில் சிங்களவர்களாலும் வடக்கில் தமிழர்களாலும் வன்முறைகள் வெடித்ததால் நாடு கொந்தளிப்பில் இருந்த 1986ஆம் ஆண்டு விக்டர் ஐவன் பத்திரிகைத் துறையில் நுழைந்தார். அவர் தொடங்கிய 'ராவய' என்ற மாத இதழ் விரைவில் வாசகர்களிடையே பிரபலமடைந்தது. அந்த நேரத்தில் அதிக தேவை கொண்ட பத்திரிகையாக மாறியது. இந்த பத்திரிகை ஊடாக அவர் பல்வேறு உண்மைகளை வெளிக் கொணர்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(4ம் பக்கத் தொடர்ச்சி) பொதுச்சபையினது சேர்க்கை தவறானதாக இருந்திருக்கிறது. பொதுச்சபையின் எண்ணிக்கை 156 பேராக ஆகக் கூடுதலான எண்ணிக்கையாக இருக்கின்ற போதும் அதன் எண்ணிக்கை 346 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கின்றார்கள் என்பதாகும். ஏற்கனவே சேனாதிராஜா, சிறிதரன், யோகேஸ்வரன் உள்ளிட்டவர்கள் பொதுச்சபை தொடர்பில் வழக்காளியின் கோரிக்கையை ஏற்று நிவாரணம் அளிப்பதென்று எழுத்துமூலமாக நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். அதேபோன்று, நான் உள்ளிட்டவர்கள் பொதுச்சபை கூட்டியது சரியானதென்றும் எனினும் வழக்கினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஏனைய தரப்பினருடன் இணைந்து வழக்காளிக்கான நிவாரணத்தை அளிப்பதென்றும் இணங்கியுள்ளோம். இதனை நடைமுறைப்படுத்தினால் வழக்கினை முடிவுக்கு கொண்டு வர முடியும். வழக்கினை நீடித்துக் கொண்டிருப்பதற்கான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

# ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை ஏதேனுமொரு பரிமாணத்தில் தொடர வேண்டும் - அம்பிகா வலியுறுத்து

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையின் கடந்த கால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது ஏதேனுமொரு மட்டத்தில் தொடர வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், ஏனெனில் இலங்கையில் மீறல்கள் எவையும் இடம் பெறவில்லை என அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருவதை நிராகரிக்கும் பொறிமுறையாக இதுவே இருக்கிறது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் காலநீடிப்பு செய்யப்பட்ட 57-1 தீர்மானம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில், இலங்கையில் இடம் பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை எவ்வகையிலேனும் தொடர வேண்டியது அவசியம் என சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின்



உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற வேளையிலேயே இலங்கையில் ஜனாதிபதித்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனையடுத்து இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பிலான தீர்மானம் வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருட காலத்துக்குக் கால நீடிப்பு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு ஓராண்டுக்கு காலநீடிப்பு செய்யப்பட்ட தீர்மானம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடருடன் முடிவுக்கு வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான அடுத்தகட்ட அணுகுமுறை எவ்வாறிருக்கப் போகிறது என நன்கறியப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதனிடம் வினவிய போது, உலகளாவிய ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் முக்கிய கவனம் பெற்றிருப்பதனால், எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத் தொடரின் போது இலங்கை தொடர்பான தீர்மானம் புதுப்பிக்கப்படுமா? அல்லது புதியதொரு பிரேரணை கொண்டு வரப்படுமா? என்பது பற்றி உத்தரவாதமாகக் கூற முடியாது எனத் தெரிவித்தார்.

இருப்பினும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது ஏதேனுமொரு மட்டத்தில் தொடர வேண்டியது அவசியம் என வலியுறுத்திய அவர், ஏனெனில் இலங்கையில் மீறல்கள் எவையும் இடம் பெறவில்லை என அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருவதை நிராகரிக்கும் பொறிமுறையாக இதுவே இருக்கிறது எனச் சுட்டிக்காட்டினார்.

# ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகளிடம் ஒரு வருட காலத்துக்கு நீடியுங்கள் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை!




ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ள வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், அதற்குச் சமாந்தரமாக இலங்கை தொடர்பில் சர்வதேச நீதிப் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் இணைந்து வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கு எதிரான சர்வதேச பிரகடனத்தின் ஊடாக வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கு எதிராகப் போராடும் குழுவினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான உலகளாவிய மாநாடு கடந்த 15 - 16 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளரும், கிளிநொச்சி மாவட்டத் தலைவியுமான லீலாதேவி ஆனந்த நடராஜா, முல்லைத்தீவு மாவட்டத் தலைவி மதியசுரேஷ் ஈஸ்வரி, மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமல நாயகி, கொழும்பில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 மாணவர்களில் ஒருவரின் தாயான ஜெனி.:பர் மற்றும் 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பிலுள்ள சுவிஸ்லாந்து தூதரகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையிலிருந்து இம்மாநாட்டில் கலந்து கொண்ட மேற்குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினர், மாநாட்டில் வலிந்து காணாமலாக்கப்படல்களுடன் தொடர்புபட்ட விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குழு ரீதியான கலந்துரையாடல்களில் பங்கேற்று, தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

அதேவேளை இலங்கையிலிருந்து சென்ற பாதிக்கப்பட்ட தரப்பினர், இம்மாநாட்டுக்கு அப்பால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்கீழ் இயங்கி வரும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் அதிகாரிகள் உள்ளடங்கலாக பல்வேறு முக்கிய தரப்பினருடன் இருதரப்பு சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இச்சந்திப்புக்களின் போது தற்போது ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய பாதிக்கப்பட்ட தரப்பினர், இருப்பினும் அதற்குச் சமாந்தரமாக இலங்கை தொடர்பில் சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இலங்கையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தரப்பினரின் கரிசனைகளையும், வேண்டுகோள்களையும் செவிமடுத்த ஐ.நா அதிகாரிகள், அவை தொடர்பில் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தினர்.

# எனது உயிர் ஒரு நோக்கத்திற்காகவே காப்பாற்றப்பட்டது

எனது உயிர் ஒரு நோக்கத்திற்காகவே காப்பாற்றப்பட்டது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.


எனது ஒரு உயிர் ஒரு நோக்கத்திற்காகவே காப்பாற்றப்பட்டது. கடந்த 8 வருடங்களில் வேறு எந்த ஜனாதிபதியையும் விட நானே அதிகளவு சோதனைகளை அனுபவித்துள்ளேன். சிலர் எங்களின் நோக்கத்தை தடுத்து நிறுத்த முயன்றனர் சிலர் எனது சுதந்திரத்தை எனது உயிரை பறிக்க முயன்றனர்.

அமெரிக்கா மிகவும் சிறந்ததாக மாற்றும் நோக்கத்திற்காகவே எனது உயிர் காப்பாற்றப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க அமெரிக்க மெக்சிக்கோ எல்லையில் தேசிய அவசர காலநிலையை அறிவிக்கும் பிரகடனம் வெளியிடப்படும் என அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைவது உடனடியாக தடுக்கப்படும் என தெரிவித்துள்ள அவர் மில்லியன் கணக்கான அமெரிக்காவிற்கு சொந்தமில்லாத குற்றவாளிகள் எங்கிருந்து வந்தார்களோ அவர்களை அங்கே அனுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகவும் டொனால்ட் ட்ரம்ப் 20 ஜனவரி 2025 பதவியேற்றார். டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்கள்




அவரது உருவம் மற்றும் பெயர் பதிக்கப்பெற்ற ஆடைகள், பாதணிகள் மற்றும் ஆபரணங்களை அணிந்திருந்ததனர். டொனால்ட் ட்ரம்ப் இதற்கு முன்பதாக 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2021 ஆம் ஆண்டு ஜனவரி வரை ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் முன்வரிசையில் இருந்த பெண் அமைச்சரை துரத்திய இந்தியத் தூதரகஅதிகாரி

இந்திய தூதரக அதிகாரிகளால் பெண் அமைச்சர் அவமதிக்கப் பட்டமை சர்ச்சைகளை தோற்று வித்துள்ளது. இந்திய தூதரகம் இவ்விடயத்தினால் அல்லாட தொடங்கியுள்ளது.

மகளிர் சிறுவர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தேசிய தைப்பொங்கல் விழாவில் நிகழ்வின் ஆரம்பம் முதல் முன் வரிசையில் அமர்ந்து நிகழ்வை பார்வையிட்டுக் கொண்டிருந் தார். நிகழ்வின் இடையில் வந்த இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா அவருக்கு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தார்

திடீரென வந்த இந்திய தூதரக அதிகாரி ஒருவர் அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் அருகில் சென்று தூதுவருக்கு அருகில் துணைத் தூதுவர் அமர உள்ளதால் அவரை மறுபக்க கதிரையில் அமருமாறு கூற அவரும் ஆசனத்திலே இருந்து எழுந்துவிட்டார். அருகிலிருந்த



அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களும் அந்த நொடி திகைத்து நின்றனர்.

பெண் அமைச்சர் எழும்புவதனை அவதானித்த இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா துணைத்தூதுவரிடம் கேட்க, அவரை மற்றைய பக்க கதிரைக்கு மாற்றியதாக கூற உடனடியாக துணைத் தூதுவரை அந்த இடத்திலிருந்து எழும்புமாறு கூறி அவ் ஆசனத்திலே அமைச்சர் சாவித்திரி போல்ராஜை அமரவைத்தார். ஆனால் நிகழ்வின் முன் வரிசையில் அமரும் ஒரு அமைச்சரையே வேறு கதிரையில் அமருங்கள் என கூறும் அளவிற்கு ஒரு தூதரக பணியாளர்கள் அதிகாரமிக்கவர்களாக காணப்படுகின்றனரா?

ஏனைய நாடுகளிலும் இவ்வாறான அதிகாரங்கள் தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றதா? என கேள்வி எழுப்பியுள்ளார் இளம் ஊடகவியலாளர் ஒருவர்.

# மூத்த நாடகக் கலைஞர் குழந்தை சண்முகலிங்கத்தின் பூதவுடல் தீயுடன் சங்கமம்



ஈழத்து தமிழ் நவீன நாடக உலகின் தாய் என்று வர்ணிக்கப்படுகின்ற கலாநிதி ம.சண்முகலிங்கத்தின் (குழந்தை) இறுதிக்கிரியை 20 ஜனவரி 2025 திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

1931ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதி திருநெல்வேலியில் பிறந்த இவர் கடந்த 17.01.2025 அன்று இறையடி சேர்ந்தார்.

நீர்கொழும்பில் தங்கொட்டுவ கிராமத்தில் தன் தந்தை வேலை செய்த தென்னை எஸ்ரேட்டில் வளர்ந்தவர். அங்கு அடிநிலை சிங்கள தமிழ் மக்களோடு வாழ்ந்திருக்கிறார். இவர் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை மிக்கவர்.

100க்கு மேற்பட்ட சுய ஆக்க நாடகங்களையும் 60க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு நாடகங்களையும் தமிழ் நாடக உலகிற்கு தந்த பேராளுமை. இவரது ஆற்றலும் ஆளுமையுமே நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்துறை தமிழில் வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது. குழந்தை ம. சண்முகலிங்கம் மாணவர்கள் கற்பதற்காக ஏராளமான ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தனது கருத்துக்களை நாடகத்தினூடாக சொல்வதில் எந்த சமரசத்துக்கும் செல்லாதவர்.

மண்சுமந்த மேனியர் எந்தையும் தாயும் அன்னையிட்ட தீ ஆர்கொலோ சதுரர் கூடி விளையாடு பாப்பா பஞ்சவர்ணநரியார் முதலானவை இவரது முக்கியமான நாடகங்களாகும்.

இவரது நாடகப்பணியைப் பாராட்டி கிழக்கு பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. அன்னார் வயது மூப்பின் காரணமாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தனது 93ஆவது வயதில் காலமானார்.

# யாழ்ப்பாண கலாசார மையம் திருவள்ளுவர் கலாசார மையமாக மாறியது ஏன்? திகைக்கும் தமிழ் ஆர்வலர்கள்?




யாழ்ப்பாண கலாச்சார நிலையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பிலான சர்ச்சைகள் உக்கிரமடைந்துள்ளது.

இந்நிலையில் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அவசியமான தேசிய நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் .அவ்வகையில், இதனுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்த இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கையின் தற்போதைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர், மற்றும் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் பெயர் மாற்றப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதேவேளை திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததை பார்த்து தான் அதிர்ச்சியுற்றதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பெயர்களான யாழ். கலாசார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன் எனவும் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். எனினும் யாழ்.கலாசார மைய பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்கும் மறைகரம் எதுவெனவும் டக்ளஸ் கேள்வி எழுப்பியுள்ள அவர் தமிழர்களின் கலாசார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதனை நோக்கமாக கொண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்தக் கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாக தற்போது காணப்படுகின்றது. யாழ். மாநகர சபைக்கு சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் எம்மாலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பேராசிரியரும் தமிழ் மொழி ஆர்வலருமான பிரசாந்தன் ஸ்ரீவரதராசன் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார். இராமனுக்கு முடி சூட்டு எனும் சேதியறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தாளாம் முதலில் கோசலை. பின் அம்முடி தசரதன் தலையிலிருந்து தான் இறங்கவுள்ளது என்பது புரிய, அம் மகிழ்ச்சி கண்ணீராயிற்றாம். இன்றென் நிலையும் அதுதான். இவ்வுலகில் நான் ஆகவும் மதிக்கும் அறிவு மேதையான திருவள்ளுவர் பெயரில் ஒரு கலாசார மண்டபம் என அறிந்து துள்ளிக் குதித்தது மனது. ஆனால், அப்பெயர் என் தாய் நகரான யாழ்ப்பாணத்தின் பெயரை அழித்து எழுதப்பட்டது எனும் பொழுது மனசெல்லாம் கசங்கி விட்டது. வள்ளுவர் பெயரில் ஆயிரம் மண்டபங்கள் அமைக்கப்படட்டும். மகிழ்ச்சியே. கலாசார நிலையங்களுக்கு மேதையர் பெயர்களை இடுவது இந்திய அரசின் மரபாகவும் இருக்கட்டும். இங்கு நெருடல் தருவது என் தாயின் பெயர் அழிக்கப்படுவதே. இம் மண்டபத்துக்கு திறப்பு விழா வன்றே மேதை வள்ளுவர் பெயரை இட்டிருக்கலாம், சம்பந்தப்பட்ட தரப்பினர். ஒரு பெயர் பரிச்சயமான பின்பு, பல நிகழ்ச்சிகளிலும் அது பயின்று விட்ட பிறகு, மாற்றுவது எவருக்கும் அழகில்லை. வள்ளுவர் வாசகத்திலேயே சொல்வ தானால்... எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு

# திரை விலகிய பின்னரே பெயர் மாற்றப்பட்ட விடயம் தனக்குத் தெரியும் அமைச்சர் சந்திரசேகரன்!

யாழ். கலாச்சார மையத்தைத் திருவள்ளுவர் கலாச்சார மையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட விடயம் எனக்கு தெரியாது. நிகழ்வில் கலந்து கொண்டிருந்த வேளை பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன் என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்கந்தர்மடப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் நிதி பங்காளிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ். கலாச்சார மையத்துக்கு திருவள்ளுவர் கலாச்சாரம் மையம் என பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இந்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாச்சார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பெயர்களான யாழ். கலாச்சார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாச்சார மையம் என்று காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமையும் கவலை தரும் விடயமும் கூட.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிலவேளை தெரியாமல் சில தவறுகள் இடம் பெற்று இருக்கக்கூடும். இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம் பெறா வண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படும் என தெரிவித்தார்.

# நரேந்திரமோடியின் இந்தியா இலங்கைத் தமிழர்களை கைவிட்டு விட்டதா?

2024 செப்டெம்பரில் இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்று நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) கூட்டணி மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்ற பின்னர் அநுர குமார திசாநாயக்க புதுடில்லிக்கு தனது முதலாவது வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் நீங்கள் ஆரவாரம் செய்யத் தொடங்கும் முன், ஒரு கணம் நிதானி த்து இலங்கை சுதந்திரம் அடைந்த திலிருந்து தேசத்தை இரும்புப் பிடி யில் வைத்திருந்த ஒரு சில குடும்ப ங்களின் 75 ஆண்டு கால ஆட்சியை வெற்றிகரமாக வீழ்த்திய இந்தத் தலை வர் யார்? என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

என்.பி.பி. கூட்டணிக்கு தலைமை தாங்கும் போது, திசாநாயக்க மக்கள் விடுதலை முன்னணியை (ஜனதா விமுக்தி பெரமுன) பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

கடந்த காலத்தை காலத்தை நினைவு கூரும் அதேவேளையில், கடந்த கால வன்முறைகளுக்காக திசாநாயக்க மன்னிப்புக் கோரியுள்ளார் என்பதையும், அதன் விளைவாக, தமிழர்கள் பெரும் பான்மையாக உள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு மாவட்ட த்தைத் தவிர மற்ற அனைத்திலும் அவரது வேட்பாளர்கள் வெற்றி பெற்ற தையும் நாம் கவனிக்க வேண்டும். வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கிலிருந்து அவர் நாடு தழுவிய ஆதரவின் விளைவாக அவரது சொந்த வார்த்தைகளில் அவரது கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையை பெற்றுள்ளது.

ஜே. வி. பி முன்னர் தமிழர்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளுக்கு எந்தவொரு அதிகாரப் பகிர்வையும் எதிர்த்தது. அத்துடன், உத்தியோக பூர்வ இலங்கையின் மொழிகளில் தமிழையும் இணைத்து ஒரு சமஷ்டி



முறைமை தொடர்பான தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையையும் ஏற்க மறுத்து விட்டது. எவ்வாறாயினும், சமீபத்திய தேர்தல்களில், தமிழர்கள் தங்களின் சொந்த பாரம்பரிய தமிழ் தலைவர்களை கைவிட்டு தீவிர சிங்கள – பௌத்தர் என்ற பெயரைப் பெற்றிருந்த போதிலும் திசாநாய க்கவை ஆதரித்தனர். ஆனால், அதற் கெல்லாம், ஒரு பெரிய வெற்றிடம் உள்ளது. அது நிரப்பப்பட வேண்டும். சிங்கள பெரும்பான்மையான இலங்கை யில் தமிழ் சிறுபான்மையினருக்கான இறுதி இடம் அதுவாகும். இந்த முக்கிய பிரச்சினைக்கு தீர்வு காண, இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் குறித்து முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியால் 1987ல் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜீனி யஸ் ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார் த்தை நடத்தப்பட்டது.

அது தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண ங்கள் இணைக்கப்பட்டதை வெளிப் படையாக உறுதி செய்தது. அங்கு தமிழர்கள் பெரும்பான்மையினராகும். இலங்கையில் சமத்துவம் மற்றும் கௌரவமானதுமான இடமாகவும் நிலம் மற்றும் சட்டம் ஒழுங்கு உட் பட மத்திய அரசின் கடிவாளங்கள் அனைத்தும் இல்லாமல் தமிழ் பெரும் பான்மை ஆட்சி செய்ய முடியும். பெரும்பாலான தமிழ் அரசியல் மற்றும் போர்க்குணமிக்க குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டு சம்மேள னம் மற்றும் பிரிவினை ஆகிய இரண்டையும் விட இது குறைவாக இருந்தது. ஆனால் அவர்களின் தேசிய அரசு சிதைவதற்கான ஒரே மாற்றீடாக இலங்கை அரசாங்கத்தால் தயக்கத்து டன் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் 1987 உடன்படிக்கையின் செல்லுபடியை அல்லது சட்டபூர்வ மான தன்மையை ஜே.வி.பி அப்போ பாதும் சரி, இப்போதும் சரி ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கை அரசியல மைப்பின் 13வது திருத்தம் இந்தியா – இலங்கை மீது திணித்ததென்பது ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும்.

ஜே. வி. பி. யின் நிலைப்பாடு கடற் படையை சேர்ந்தவரின் கோபத்தில் பிரதிபலித்தது, பிரதமர் புறப்பட்டு செல்லும்போது அளிக்கப்பட்ட அணி வகுப்பு மரியாதை நிகழ்வின்போது அவர் ராஜீவ் ாந்தியை அவரது துப்பாக்கியால் தாக்கினார். ஆகவே இந்தியா இலங்கை உறவுகளின் எதிர் காலத்திற்கான பாதையை அமைக்கும் கூட்டு அறிக்கையில் 34 பத்திகள் இரு ந்த போதிலும், இலங்கையில் உள்ள தமிழர்களின் எதிர் காலம் குறித்த முக்கிய கேள்விக்கு பதிலளிக்கப்பட வில்லை:

13வது திருத்தம் இல்லையென்றால், பிறகு என்ன?

புதுடில்லி சென்னை உறவுகளுக்கும், இந்தியாவின் ஐக்கியத்துக்கும் ஒரு மைப்பாட்டுக்கும் ஆபத்தான தாக்க ங்கள் உள்ளதாக நரேந்திர மோடியின் இந்தியா இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டு விட்டதா? அல்லது திஸா நாயக்க அவர் மனதில் வைத்திருப்பது குறித்து மோடி ஸ்தாபனத்திற்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளாரா? யாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பி சிறு த்தை தனது புள்ளிகளை மாற்றி விட்டதா? அல்லது மோடி அரசாங்க த்தை போன்று சிறுபான்மையினரை இழிவுபடுத்தும் பாதையில் திஸாநா யக்கா அரசும் பயணிக்கிறதா?

கட்டுரையாளர்:-
மணிசங்கர் ஐயர்
முன்னாள் இந்திய மத்திய அமைச்ச ரும் சமூக விமர்சக ருமாவார்.



# எடுகோளின் அடிப்படையிலான முடிவு நட்டாற்றிலுள்ள மண் குதிரையாகவும் ஆகலாம்!

கட்டுரையாளர்:-
தம்பியப்பா
கோபாலகிருஷ்ணன்
மட்டக்களப்பு



தமிழ் அன்பரொருவர் தனது 'வாட்ஸ் அப் 'பில் 'இன, மத, பிரதேச பிரிவினை களை முன் வையாத புதிய அரசியல மைப்பு கொண்டு வரும் போது 13 தேவையற்றது' என எனக்குப் பதி விட்டிருந்தார். இப் பதிவையிட்டவர் படித்தவர். வங்கி ஒன்றின் முகாமை யாளராக உயர் அதிகாரியாகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். இவரே இப்படிச் சிந்திக்கிறாரென்றால் சாதா ரண தமிழ் மகனொருவன் எப்படிச் சிந்திப்பான் என்று எண்ணியபோது தமிழ் மக்கள் அரசியல் சிந்தனைகளில் எவ்வளவு பலவீனமாக உள்ளார் களென்பது பட்டவர்த்தனமாயிற்று.

இத்தகைய மேலோட்டமான சிந்தனை அபத்தமானது. ஆபத்தானதும் கூட. ஜனாதிபதி அனுரகுமாரதிசாநாயக்கா மீது கொண்டுள்ள அதீத நம்பிக்கை யும் அவர் கூறும் உத்தேச புதிய அரசியலமைப்பே தமிழ் மக்களுடைய இனப் பிரச்சனை உட்பட எல்லா பிரச் சனைகளுக்கும் சகல ரோக நிவாரணி என்ற எதிர்பார்ப்பும் அந்த அன்பரை அவ்வாறு எண்ணவும் அதனைப் பதிவிடவும் உந்தியிருக்கலாம். ஆனால் இத்தகைய எதிர்பார்ப்பும் சிந்தனையும் தமிழ் மக்களைப் பொறு த்தவரை ஆபத்தானது என்பதை உணர்த்துவதே இம்முறையைப் பத்தி யின் நோக்கமாகும்.

அனுரகுமார திசாநாயக்கா காட்டும் எளிமை, தேசிய மக்கள் சக்தி முன் வைக்கும் ஊழலற்ற–அதிகார துஷ் பிரயோகங்களற்ற–வீண் ஆடம்பரச் செலவுகளற்ற–சட்டம் ஒழுங்கை ஒழுங் காகப் பேணிக் கடைப் பிடிக்கின்ற– எல்லோரும் இலங்கையர் என்ற தாரக மந்திரத்தோடு கூடிய அரச நிர்வாகம் அல்லது ஆட்சி மட்டும் தமிழ் மக்களுடைய சமூக பொருளாதார அரசியல் அபிலாசைகளைத் திருப்தி படுத்தி விடாது.

அதுக்கும் மேலால், ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது எதிர்கால இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாத்து அதனை அடுத்த சந்ததி க்கு மடைமாற்றம் செய்யும் வகை யிலான அதிகாரப் பகிர்வுப் பொறி முறையொன்றினையே கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக இலங்கை யின் அரசியல் பொதுவெளியில் தமிழ் மக்கள் அவாவி நிற்கிறார்கள். அதற் காகவே யார் சரி? யார் பிழை? எது சரி? எது பிழை என்பதற்குமப்பால் கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக் கான உயிரழிவுகளையும் பல கோடிச் சொத்தழிவுகளையும் கலாசாரச் சீரழிவு களையும் தாம் செறிந்து வாழும் தாயகத்தில் சூழல் அழிவுகளையும் பலவிதமான உளவியல் தாக்கங்களை யும் தாங்கிக் கடந்து வந்துள்ளனர். இதனை அறிவார்ந்த எவரும் மறுத லிக்க முடியாது. தற்போது அமுலி லுள்ள அரசியல் அமைப்பிலும் கூட கொள்கை ரீதியாக வார்த்தைப் பிரயோ கங்களில் இன மத பிரதேச பிரிவினை



கள் இல்லைத் தான். ஆனா லும் தமிழ்த் தேசிய இனம் அடக்கு முறை களுக்கும் ஒடுக்குமுறைகளுக் கும் பாரபட்சங்களுக்கும் உள்ளாகி வந்துள் ளதே? அது ஏன்?

உண்மையில் இங்கு வேண்டப்படு வது எப்போதுமே அது எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் சரி (தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத் தில் உள்ளது. எதிர்காலத்தில் இது மாற்றம் அடையலாம்) ஆட்சியில் அமரக்கூடிய பெரும்பான்மைச் சிங்கள பௌத்த சமூகத்தின் மனமாற்றம் ஆகும். அந்த மன மாற்றத்தைப் புதிய அரசியலமைப்பினால் மட்டும் ஏற்படு த்தி விட முடியாது. இருதரப்புப் புரிந் துணர்வின் மூலமும் இருதரப்பு நம்பி க்கைகள் மூலமுமே அது சாத்தியம்.

அதற்கான ஒரு வாய்ப்பை இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு வரலாறு வழங்கியுள்ளது. வாய்ப்பை — சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத் திக் கொள்ளவே வண்டும். இதுவும் தோற்றுப் போகுமானால் இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் எதிர் காலம் நிரந்தர கேள்விக் குறியாகி விடும்.

13ஆவது திருத்தம் தமிழ் மக்கள் போராடிப் பெற்ற ஒன்று என ஜனாதி பதி அனுரகுமார திசாநாயக்காவே ஒப்புக் கொண்டுள்ளதொரு விடய த்தை முழுமையாகவும் முறையாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் மேலும் தாமதியாது இழுத்தடிக்காது அமுல்

# தோழர் அநுரவுக்கும் ஜனாதிபதி அநுரவுக்கும் இடையில் உள்ள வேறுபாடு?



தேங்காய் விலை இறங்கவில்லை. பெரிய தேங்காய் ஒன்று 200 ரூபாய் வரை போகிறது. முட்டை விலை கிறிஸ்மஸுக்கு சற்று முன் 27 ஆக இறங்கியது. ஆனால் இப்பொழுது மீண்டும் 35க்கும் 40க்கும் இடையே போய்விட்டது. அரிசி விலையும் உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடைக் காலத்தில் மழை பெய்கின்றது. வன்னியில் வீதியோரங்களில் காய விடப்பட்ட நெல்மணிகள் நனைகின்றன. நெற் பயிர்களை ஒரு புழு தாக்குவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். அந்தப் புழுவை அதிக அளவு மருந்துகளைப் பிரயோகித்துக் கட்டுப்படுத்த வேண்டியிருப்பதாகவும் கூறுகிறார்கள். இப்படியே போனால் அரிசி விலை மேலும் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு.

விவசாயப் பாரம்பரியத்தில் வந்த இலங்கைத் தீவு அரிசியை இறக்குமதி செய்து வருகின்றது. கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகிய இலங்கை உப்பை இறக்குமதி செய்கின்றது. அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான பிடித்து வைத்திருக்கும் வரியை (with holding tax) அதிகரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. வங்கிகளுக்கு அது தொடர்பாக உத்தியோகபூர்வமாக எதுவும் கூறப்படவில்லை என்று வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிடித்து வைத்திருக்கும் வரி என்பது நிலையான வைப்புக்களுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் வரியாகும். ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் இந்த வரி ஐந்து விகிதமாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது அனுர அதனை 10வீதமாக உயர்த்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே நிலையான வைப்புக்களுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டு விட்டது.

தமிழ் மக்கள் மத்தியில் நிலையான வைப்புக்களை வைத்திருப்பவர்கள் யார் என்று பார்த்தால், பெருமளவுக்கு பென்சனியர்கள் அல்லது வெளிநாட்டில் இருந்து பிள்ளைகள் அனுப்பும் காசில் தங்கியிருப்பவர்கள்தான். இவர்களில் யாருக்குமே முதலீட்டாளராக வர வேண்டும் என்ற ஆசை கிடையாது. தம்மிடமுள்ள செல்வத்தை ஏதாவது தொழில் துறைகளில் முதலீடு செய்து அதை லாபமாக எடுக்கத் தேவையான துணிச்சல் அவர்களுக்கு இல்லை. இருக்கிற காசுக்கு கிடைக்கிற வட்டியோடு திருப்திப்படும் ஒரு பகுதியினர் இவர்கள். அதிகம் ஆசைப் படாதவர்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய வருமானத்திலும் மண் விழப் போகிறதா?

ஏற்கனவே அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான வட்டி விகிதத்தை குறைத்து விட்டது. அதனால் பல முதியவர்கள் மனம் நொந்து போய் இருக்கிறார்கள். இப்பொழுது அந்த வட்டிக்கான வரியை உயர்த்துவது என்பது அவர்களை மேலும் பாதிப்படையச் செய்யும்.

அனுர ஆட்சிக்கு வந்தபின் இதுவரையிலுமான பொருளாதார நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் நடுத்தர வர்க்கமும் கீழ் நடுத்தர வர்க்கமும் அதற்கு கீழ் தட்டில் வாழ்பவர்களும் பாதிக்கப்படும் நிலைமைகள் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன.



அதாவது நாடு தொடர்ந்தும் பொருளாதார ரீதியாக ஸ்திரமான நிலையில் இல்லை என்று பொருள். அனுர நினைத்தது போல மாற்றங்களைச் செய்ய முடியவில்லை. முன்னைய ரணில் அரசாங்கம் வகுத்த தடத்தில் தான் புதிய அரசாங்கமும் பயணம் செய்கின்றது. ரணில் தொடக்கி வைத்ததைத்தான் அனுர தொடர்ந்து செய்கிறார்.

தோழருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்று புளட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன் அண்மையில் ஒரு பேட்டியில் சுட்டிக் காட்டியிருந்தார். தோழராக இருந்த அனுர இப்பொழுது ஜனாதிபதியாக வந்திருக்கிறார். தோழராக இருந்த போது அவர் வழங்கிய வாக்குறுதிகளுக்கும் ஜனாதிபதியாக வந்தபின் அவர் தலைமை தாங்கும் அரசியலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன. தேர்தல் காலத்தில் வழங்கிய இலட்சியப் பாங்கான வாக்குறுதிகள் பல நடைமுறைச் சாத்தியமற்றவைகளாக தோன்றுகின்றன.

இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் குழந்தை. பொருளாதார நெருக்கடியின் விளைவாக வந்த அரசாங்கம் இது. பொருளாதார நெருக்கடியைச் சரியாகக் கையாளவில்லை என்றால் சிங்கள மக்கள் இந்த அரசாங்கத்தையும் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். ஏற்கனவே பொருளாதார நெருக்கடி வந்த கிரீஸ், அர்ஜென்டினா போன்ற நாடுகளில் நிலைமை அப்படித் தான் இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியை குறைந்தபட்சம் ஓரளவுக்காவது தணிக்க வேண்டும். அரசாங்கம் அதன் கவனம் முழுவதையும் அதில் தான் குவிக்கும்.

மேலும் தனக்கு கிடைத்த மக்களாணையை எப்படித் தொடர்ந்து பலப்படுத்துவது என்று தான் சிந்திக்கும். இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறேன் என்று புறப்பட்டு மூன்று இனங்களையும் பகைக்கும் ஒரு நிலைமைக்கு போக அனுர தயாராக இல்லை. இனப்பிரச்சனையில் கை வைத்தால் தனக்குக் கிடைத்த வெற்றிகள் தோல்விகளாக மாறிவிடலாம் என்ற பயம் அவருக்கு உண்டு. எனவே பொருளாதார நெருக்கடி முதலில் இனப்பிரச்சனைக்கான தீர்வு கடைசியில் என்று தான் அவர் முடிவெடுக்கக்கூடும்.

அந்த அடிப்படையில் இந்த அரசாங்கத்தின் இறுதி காலகட்டத்தில் தான் அவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக எதையாவது செய்ய முயற்சிக்கலாம். மகா சங்கத்தினரும் அரசாங்கத்துக்கு அவ்வாறு தான் ஆலோசனைகளை வழங்கியிருப்பதாக ஒரு தகவல்.

எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யாப்புருவாக்க முயற்சிகளை விடவும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் குறித்தே அரசாங்கம் முதலில் சிந்திக்கும். அதோடு தனக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடுத்தடுத்த தேர்தல்களில் எப்படி பலப்படுத்துவது என்று தான் சிந்திக்கும்.

இந்த அடிப்படையில் பெரும்பாலும் தேர்தல்கள் நான் முதலில் வரும். யாப்புருவாக்க முயற்சி இப்போதைக்கு வரும் வாய்ப்புகள் குறைவு. வந்தாலும் அதனை மெது மெதுவாகத் தான் நகர்த்துவார்கள்.

எனவே இப்போதைக்கு வராத அல்லது வராமலே போகக் கூடிய யாப்புருவாக்க முயற்சிகளை நோக்கித் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைப்பதா? அல்லது உடனடிக்கு வரக்கூடிய தேர்தல்களை நோக்கி தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைப்பதா? எது உடனடியாகச் செய்யப்பட வேண்டியது?

இந்தக் கேள்வியின் பின்னணியில் வைத்துத் தான் அண்மை வாரங்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்து வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளையும் பார்க்க வேண்டும். இந்த முயற்சிகளின் அடுத்த கட்டமாக வரும் 25ஆம் தேதி கட்சிப் பிரமுகர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நடக்கவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைப்பது. படிப்படியாக கட்சிகளை ஒருங்கிணைப்பது என்ற திட்டம் இதில் இருக்கலாம். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் யாப்புருவாக்க முயற்சிகளை நோக்கி ஒருங்கிணைவதா? அல்லது உடனடியாக வரக்கூடிய தேர்தல்களை நோக்கித் தந்திரோபாயமாகச் சிந்திப்பதா? இது அவசியமானது? எது உடனடியாகச் செய்யப்பட வேண்டியது?

யாப்பு வரலாம் வராமல் விடலாம். ஆனால் தேர்தல் வரும். அந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி தன்னை மேலும் தமிழ்ப் பகுதிகளில் பலப்படுத்துமாக இருந்தால், அர்ஜுனாக்கள் மேலும் புதிதாக எழுவார்களாக இருந்தால், உள்ளூராட்சி மன்றங்கள் பல அறுதிப் பெரும்பான்மை இல்லாத தொங்கு மன்றங்களாகவே அமையக் கூடும். அவ்வாறு நடக்கக்கூடிய தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியானது தமிழ் மக்கள் மத்தியில் மேலும் வெற்றிகளைப் பெற்றால் என்ன நடக்கும்?

தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் இப்பொழுது தமிழ்த் தரப்பு அல்ல. நாங்களும் தமிழ்த் தரப்புத் தான் என்று அவர்கள் முன்னரை விடப் பலமாகச் சொல்வார்கள். ஏற்கனவே திருக்கோணமலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவரும் பிரதி வெளிவிகார அமைச்சருமாகிய அருண் அவ்வாறு சொல்லி விட்டார்.

எனவே அடுத்தடுத்த தேர்தல்களிலும் தமிழ்த் தரப்பு எனப்படுவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டுமல்ல என்ற நிலைமை மேலும் பலமடையுமாக இருந்தால், அதன் பின் வரக்கூடிய ஒரு யாப்புருவாக்க முயற்சியில் அரசாங்கத்தின் பிடி முன்னை விடப் பலமாக இருக்கும். அவர்கள் விரும்பிய தீர்வை நோக்கி நிலைமைகளை நகர்த்தவும் முடியும். எனவே உடனடிக்கு வரக்கூடிய தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களை ஒரு பலமான தரப்பாக நிரூபிக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாதது கட்டாயமானது.

இந்தத் தேவையை முன் வைத்து தமிழ்க் கட்சிகள் குறைந்தபட்சம் தந்திரோபாய பகைத் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றுக்குப் போக வேண்டியது அவசியமா? அல்லது இப்போதைக்கு வராத ஒரு யாப்புருவாக்க முயற்சியை நோக்கி மெது மெதுவாக ஒன்று திரள்வது அவசியமா?

- நிலாந்தன்

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவணைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 ஜனவரி 2025- 24 ஜனவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 22 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் அமரர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அப்புத்துரை சின்னம்மா

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 20 ஜனவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 25 ஜனவரி 2025 சனிக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா (ரீ) அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா கணேசமூர்த்தி

நாவலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



15 ஜனவரி 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலமுரளி மதிவதனி தம்பதிகளின் செல்வப்புதல்வி வருணிகா பாலமுரளியின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி வருணிகா பாலமுரளி அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



19 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராமதாசன் விஜயஸ்ரீ இணையர்களின் 28வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



20 ஜனவரி 2025 திங்கட்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



23 ஜனவரி 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 ஜனவரி 2025 புதன்கிழமை புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி V.M. தம்பிஜயா மகேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




23 ஜனவரி 2025 வியாழக்கிழமை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவநேசன் துரைச்சாமி அவர்களது 41வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 24வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்



### செல்வன் சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு.திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 24வது பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அகவை இருபத்திநான்கு காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்



### திரு தர்மஸ்ரீ சிவசுப்பிரமணியம் (ஸ்ரீ)

கனடாவில் வசிக்கும் ஐயப்பன் தொண்டரும் இனநல ஆர்வலருமான திரு தர்மஸ்ரீ சிவசுப்பிர மணியம் (ஸ்ரீ) அவர்களது பிறந்த நன்நாள் 14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் திரு தர்மஸ்ரீ சிவசுப்பிரமணியம் அவர்கள் ஐயப்ப மகர மண்டல விரதத்தையும் பூர்த்தி செய்தார்.

தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். பிறந்த நாள் காணும் அவரை அன்புத் துணைவியார், பிள்ளைகள், உறவுகளுடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்க வளர்க வென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# சீனாவுக்கு எதிராக முன்னார் பேசிய அநுர இப்போது ஆதரவாளராக மாறியுள்ளாரா?

சீன எதிர்ப்பு கொள்கைகளை வெளிப்படுத்திய மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஆட்சி பீடம் ஏறிய தருணம் முதல் சீன ஆதரவு கொள்கையை கடைபிடிக்க ஆரம்பித்துள்ளது என எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ் சாட்டியுள்ளது

கொழும்பில் கடந்த 17-ஆம் தேதி இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, அநுர குமார திஸாநாயக்க கடந்த காலங்களில் சீனாவிற்கு எதிராக வெளியிட்ட கருத்துக்கள் அடங்கிய வீடியோவைக் காண்பித்து கருத்து வெளியிட்டார்.



2021-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி, அப்போதைய எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது அநுர குமார திஸாநாயக்க சீனா தொடர்பாக வெளியிட்ட கருத்தை, ஹர்ஷன ராஜகருணா ஒளிபரப்பு செய்து காண்பித்தார்.

### சீனா குறித்த அநுராவின் கருத்துக்கள்

சீன பிராந்தியமாக மாற்றும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது. ஹாங்காங் தொடர்பாக சீனாவின் திட்டமும் இதே தான். சீன ஹாங்காங் திட்டமே, கொழும்பு துறைமுக நகர் திட்டமாக அமைந்துள்ளது' என அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அநுர குமார திஸாநாயக்க, இலங்கை ஜனாதிபதியாக பதவியேற்ற நிலையில் சீனாவிற்கு விஜயம் செய்தபோது வெளியிட்ட கருத்தையும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா சுட்டிக்காட்டி வீடியோவை ஒளிபரப்பு செய்தார்.

''சீன அரசாங்கம் இலங்கைக்கு கடந்த பல தசாப்தங்களாக சமூக, பொருளாதார, அபிவிருத்திக்காக பாரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த விஜயமானது எமது இரு நாடுகளுக்கும், மக்களுக்கும் இடையிலான நெருக்கமாக உறவிற்கு வலு சேர்க்கும் என நான் நம்புகின்றேன் என அநுர குமார திஸாநாயக்க, சீன அதிபருடனான சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

இந்த காணொளிகளை ஒளிபரப்பு செய்ததைத் தொடர்ந்து ஹர்ஷன ராஜகருணா ஊடகங்களிடம் பேசுகையில் பல கேள்விகளை எழுப்பினார். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவா இவ்வாறு கதைக்கின்றார்? அவர் ஏற்கனவே கூறிய விடயங்கள் அவருக்கு தற்போது நினைவில் இல்லை. ஒரே நபருக்கு பல அவதாரங்கள் இருக்கும் நிலையும் காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்திலா இவர் இருக்கின்றார்?' எனக் கூறினார்.

மேலும், 'இந்த நாட்டை சீன காலனியாக மாற்றுகின்றார்கள் என அநுர கூறினார். அப்படியென்றால்,இந்த பயணத்தின்போது சீன காலனியிலிருந்து விடுபடுவது தொடர்பில் பேசினாரா? இந்த நாட்டு அரசியல்வாதிகளை சீன வாங்கியுள்ளதாக அவர் கூறினார். அவ்வாறு சீனா வாங்கிய அரசியல்வாதிகள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினார்

ராஜகருணா. தொடர்ந்து பேசிய அவர், 'இலங்கையை சீனா கடன் பொறிக்குள் சிக்க வைத்து ள்ளதாக அநுர கூறியிருந்தார். கடன் பொறியில் சிக்க வைத்த சீன அரசாங்கத்துடன் கலந்துரையாடி கடனை இல்லாது செய்யும் பேச்சுவார்த்தைகளில் அவர் ஈடுபடவில்லை.' சீனாவிற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விஜயம் செய்தமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். எனினும், அவர் கூறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சீனாவுடன் கலந்துரையாடல்களை நடத்தினாரா என்பதை வெளிப்படுத்த வேண்டும்' என தெரிவித்தார்.

### ஒரே சீனா கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கும் இலங்கை

இலங்கை அரசாங்கம் 'ஒரே சீன கொள்கையை' தொடர்ச்சியாக கடைபிடிக்கவுள்ளதாக கடந்த 6-ஆம் தேதி அமைச்சரவை கூட்டத்தின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கம் 'ஒரே சீன கொள்கையை' தொடர்ச்சியாக கடைபிடித்து வந்துள்ளதுடன், அதன்மூலம் சட்டரீதியான சீனாவாக, சீனக் குடியரசை மாத்திரம் மக்கள் ஏற்றுக் கொள்வதுடன் தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக் கொள்வதெனும் நிலைப்பாடாகும்' என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன விஜயம், சீனாவுடனான இராஜதந்திர உறவுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் நாட்களில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெளிவுட்டல் வழங்குவார் என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

### இந்தியாவுடனான உறவில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளையும் சமாளித்தபடி அணிசேரா கொள்கை அடிப்படையிலேயே முன்னோக்கி செல்வதற்கு அநுர அரசாங்கம் முற்படுகின்றது என மூத்த பத்திரிகையாளர் ஆர்.சனத் தெரிவிக்கின்றார்.

பிபிசி தமிழிடம் பேசிய அவர், 'தாய்வானை சீனா தனது மாகாணமாகவே கருதுகின்றது. எனினும், தாய்வானை தம்மை தனி நாடாக கருதி வருகின்றது. இதற்கு சில மேற்குலக நாடுகள் முழு ஆதரவை தெரிவித்து வருகின்றன. இந் நிலையில் தனது அரசாங்கம் ஒரே சீனா கொள்கையை ஏற்கின்றது என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது' என்று கூறினார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பிக்கு (மக்கள் விடுதலை முன்னணி) நெடுநாள் தொடர்பு இருக்கின்றது. முன்பு இருந்தே 'ஒரே சீனா கொள்கையே' ஏற்கப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே இதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய, சீன எல்லைப் பிரச்னை தொடர்பில் கொழும்பு தரப்பில் ஏதேனும் அறிவிக்கப்பட்டிருந்தால் அது டெல்லியுடனான உறவில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும். எனவே, இந்த ஒரே சீனா கொள்கை யென்பது இலங்கை மற்றும் இந்தியா வுக்கிடையிலான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தாது.' என்று குறிப்பிடுகிறார் ஆர்.சனத்.

சீனா மற்றும் இந்தியாவுடனான இராஜதந்திர தொடர்பை மிகவும் நுட்பமாக அரசாங்கம் கையாள வேண்டும், அவ்வாறு இல்லையேல் இராஜதந்திர மட்டத்திலான 'தலையிடிகள்' ஏற்படக் கூடும்'' என்று, மூத்த பத்திரிகையாளர் ஆர்.சனத் தெரிவித்தார்.


### இலங்கையில் சீனாவின் ஆதிக்கம்

அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் சீன ஆதரவு கொள்கையை கொண்டிருப்பதில் எந்தவித ஆச்சரியமும் கிடையாது என சர்வதேச விவகாரங்களின் நிபுணரும், சென்னை லயோலா கல்லூரியின் சமூக பணித்துறை பேராசிரியருமான கிளாட்சன் சேவியர் பிபிசி தமிழிடம் குறிப்பிட்டார்.

சீனாவை எதிர்க்கக்கூடிய நாடுகள் மிக குறைவாக தான் இருக்கின்றன. ராஜபக்ஸவின் காலக் கட்டத்தில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலோங்கி இருந்ததைப் பார்த்தோம். ஹம்பாந்தோட்டை துறைமுகமாக இருந்தாலும் சரி, ரயில்வே தண்டவாளமாக இருந்தாலும் சரி, மிக பெரிய உட்கட்டமைப்பாக இருந்தாலும் சரி எல்லாவற்றிற்கும் சீனாவிற்கு புகலிடம் கொடுத்து வந்தார்கள்.' என்று அவர் கூறுகிறார். அதேசமயம், இந்தியாவை விட அதிகமான உறவு அப்படியென்று சொல்ல முடியாது என்று குறிப்பிடும் அவர், இந்தியர்கள் உறவுகாரர்கள், சீனர்கள் நண்பர்கள் என இலங்கையில் சொல்வார்கள் என்கிறார்

சீனாவை பொறுத்தவரையும் கேள்விகளைக் கேட்காமல் பணம் கொடுப்பது என்பது வழக்கமானது. இங்கே மட்டும் அல்ல. வேறு நாடுகளிலும் செய்துக் கொண்டிருக்கின்றார்கள். இடதுசாரி கொள்கைகளை கொண்ட ஜே.வி.பி அரசாங்கத்திலுள்ள அநுர குமார திஸாநாயக்க, சீனாவிற்கு நெருக்கமாக இருப்பதில் எந்தவித ஆச்சரியமும் கிடையாது.' என்கிறார் கிளாட்சன் சேவியர். தொடர்ந்து பேசிய கிளாட்சன், அதே நேரம், முழுமையாக சீனாவை ஆதரிப்பார்கள் என்பதும் தவறான விடயம். சீனாவிற்கான கொள்கையை வகுத்திருக்கலாமே தவிர, சீனாவை முதன்மைப்படுத்துவது என்பது இலங்கைக்கு முரணான விடயமாக கொண்டு சென்று விட்டு விடும்.' சீனர்கள் எங்கெல்லாம் அதிகமான முதலீடுகளை செய்துள்ளார்களோ, அங்கெல்லாம் அவர்களின் ஆதிக்கம் எப்படி இருக்கின்றது என்பதை காண்கின்றோம். ஆப்பிரிக்க நாடுகளாக இருந்தாலும் சரி, மற்ற நாடுகளாக இருந்தாலும் சரி சீனா அதிக்கத்தை செலுத்த நினைக்கின்றது' என்கிறார்.

அதேசமயம், சீனாவை புறக்கணித்து விட முடியாது. ஏனென்றால், அங்கு தான் தேவையான செல்வங்கள் இருக்கின்றன, வளங்கள் இருக்கின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.



முதல் சுற்று பேச்சுவார்த்தைக்கு இப்போது தான் சென்றிருக்கின்றார்கள். சீனா உதவி செய்கின்றேன் என்று சொல்லியுள்ளது. எந்தளவிற்கு உதவிகள் வரும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சீனாவை இலங்கை ஆதரித்த போதிலும், சீனா மாத்திரம் கொண்ட எல்லா கொள்கைகளை வகுத்துக் கொள்ளவில்லை.'

கடந்த 20 வருட காலமாக இது நடந்துக் கொண்டுள்ளது. புதிய விடயம் அல்ல. ஆனால், சற்று நெருக்கமானவர்களாக காட்சியளிக்கின்றார்களே தவிர பெரியளவிலான வித்தியாசம் இல்லை' என்று கூறுகிறார் பேராசிரியர் கிளாட்சன் சேவியர். -நன்றி பிபிசி


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கனடா கிளைக்கு புதிய செயற்குழு தெரிவு!

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் [INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCu (I.A.T.R.] எனப்படும் உலகளாவிய அனமப்பின் கனடாத் தேசியக் கிளையானது திரு. சண்முகம் குகதாசன் அவர்கள் தலைமையில் (தற்போதைய இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்) ரொறன்ரோ நகரில் 2019 இல் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

அப்பொழுது அமைப்புக்கு திருவாளர்கள் வி.எஸ். துரைராஜா சிவா வேலுப்பிள்ளை கேதாரநாதன் பொ.அருந்தவநாதன் திருமதி தேன்மொழியாள் கங்காதரன் முதலியோரை உள்ளடக்கிய செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

பல்வேறு காரணிகளால் கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் தொடர்ந்து இயங்க முடியாத நிலையிலிருந்த இவ்வமைப்பானது 2024லிருந்து புதிய சூழலில் இயங்கத் தொடங்கியுள்ளது. அதுதொடர்பில் அதன் புதிய கூட்டமொன்று 23டிசம்பர் 2024 அன்று பிற்பகல் 8.00 மணியளவில் (கனடா – ரொறன்ரோ–நேரம்) இனைய வழியிலே நடைபெற்றது. திரு. சண்முகம் குகதாசன் அவர்கள் அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

அவர் தமது தலைமையுரையில் தாம் வகிக்கும் இலங்கை நாடாளுமன்றப் பதவி காரணமாக தொடர்ந்தும் இவ்வமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிப்பதிலுள்ள சிரமத்தை எடுத்துரைத்தார். அத்துடன் தமக்குப் பதிலாகப் புதியவராக ஒரு தலைவராகத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதான தமது கருத்தையும் முன்வைத்தார்

அவருடைய கருத்துக்கமைய புதிய தலைவர் தேர்வு நடைபெற்றது. தலைவர் குகதாசன் அவர்களே புதிய தலைவராக பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை முன்மொழிந்தார் அதனைச் செயலாளர் திரு. சிவா வேலுப்பிள்னள அவர்கள் வழி மொழிந்தார். அவையும் இம்முன்மொழினவ ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

புதிய சூழலின் தேவைக்கேற்பச் செயற்குழுவும் மீளுருவாக்கம் செய்யப்பட்டது. துனைத்தலைவர் செயலாளர் பொருளாளர் இலக்கியத்துறைப் பொறுப்பாளர் மற்றும் கூத்து – நாடகத்துறைகளின் பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்கு முன்னரே அப்பதவிகளில் செயற்பட்டு வந்த உறுப்பினர்களே மீண்டும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளருக்குத் துனையாகச் செயற்படுவதற்கு இனைச் செயலாளர் என்ற ஒரு புதிய பதவி நிலையும் தேவை என அவை உணர்ந்த நினலயில் முன்னைய செயற்குழுவில் இலக்கியத் துறைக்குப் பொறுப்பாளராகத் திகழ்ந்தவரே அப்பதவியையும் வகிக்கலாம் என்ற கருத்து அவையில் முன் வைக்கப்பட்டு அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதிய துறைகள் சிலவற்றின் தேவையும் அவையால் உணரப்பட்டது. அவ்வகையில் இசை மற்றும் நடனத் துறைகள் இதழியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகள் இனைய வழித் தொடர்பாடல் மற்றும் கருத்தரங்க இனைப்பு ஆகிய செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான பொறுப்பாளர்கள் சிலரும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

அவ்வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட செயற்குழுவின் முழு விவரம் வருமாறு.

தலைவர்: பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியம். .

துனைத் தலைவர்: திரு.வி.எஸ்.துரைராஜா.

செயலாளர்: திரு.சிவா வேலுப்பிள்னள.

இனைச்செயலாளர் மற்றும் இலக்கியத்துறைப் பொறுப்பாளர்: திருமதி தேன்மொழியாள் கங்காதரன்.

பொருளாளர்: திரு.இ.கேதாரநாதன்.

இனச மற்றும் நடனத்துறைகளின் பொறுப்பாளர்: கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம்.

கூத்து – நாடகத்துறைகளின் பொறுப்பாளர்: திரு. பொன்னுத்துரை அருந்தவநாதன்.

இதழியல–ஊடகத்துனறப் பொறுப்பாளர்: திரு. ஐயம்பிள்னள சண்முகநாதன்.

இனையவழித் தொடர்பாடல் மற்றும் கருத்தரங்க இனைப்பு: திரு.சபாரத்தினம் சிவானந்தன்

திருமதி கலாநிதி குலமோகன்.

திரு. வேந்தன் பேரின்பநாதன்.

திருமதி. கஜானி குமார்.

திரு. இராஜ்குமார் குணரட்ணம்

செயற்குழு நியமனங்கனளத் தொடர்ந்து புதிய தலைவர் தனது செயல் திட்டங்கள் பற்றிய சிற்றுரையை நிகழ்த்தினார். குறிப்பாக எதிர்வரும் ஆண்டுகளில் மன்றம் எப்படிச் செயற்பட வேண்டும் என்பது தொடர்பான சில எண்ணங்களை அவர் அங்கு முன் வைத்தார்.

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களாகக் கனடாவில் வாழ்ந்து வரும் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியையும் வரலாற்றையும் ஆய்வு நிலையில் ஆவணப்படுத்தல் வேண்டும் என்றும் அது தொடர்பில் இனையவழிக் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் ஆகியன நிகழ்த்தப்படல் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான செயற்பாடுகளில் தாய் அமைப்பான உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்துடனும் அதன் ஏனைய நாடுகளின் கிளையமைப்புகளுடனும் இணைந்தியங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் அங்கு வலியுறுத்தினார். அதன் பின்னர் உறுப்பினர்களின் கலந்துனரயாடல் நிகழ்ந்தது.

முன்னாள் தலைவரான திரு.சண்முகம் குகதாசன் அவர்கள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதற்கான வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.

நிறைவாக திரு. ச. குகதாசன் அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற கனடாக் கிளையின் புதிய செயற்குழுவானது சிறப்புற்று செயலாற்ற வேண்டும் என்று வாழ்த்தியதோடு நன்றியும் தெரிவித்துக் கூட்டத்தினை நிறைவு செய்தார்.



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





AYUR CARE
KERALA AYURVEDA MASSAGE & THERAPY

# வலி நிவாரண

உத்தரவாதம்

ஐந்து அமர்வுகளில்


@கட்டுப்படியான $விலையில்





சிகிச்சை

கழுத்து மற்றும்
தோள்பட்டைவலி
முதுகு வலி
முழங்கால் வலி
கால் வலி
கை வலி



உங்களை இயற்கையுடன் ஒன்றி வாழுங்கள்

எங்கள் சேவைகள்

- ✓ தலை மசாஜ்
- ✓ நீராவி குளியல்
- ✓ ஓய்வெடுத்தல்
- ✓ அரோமா மியூசிக் தெரபி
- ✓ தியானமும் புத்துணர்ச்சியும்
- ✓ முழு உடல் மசாஜ் மற்றும் நிராவி குளியல்

BOOK NOW
647-278-3846

240 ALTON TOWER CIRCLE,
UNIT 301, SCARBOROUGH,
ON M1V 4P2 VIA MCCOWAN RD.

ayurcaretoronto@gmail.com




# கிளீன் ஸ்ரீலங்கா:- பொதுக் கழிப்பறைகள்

கிளீன் சிறீலங்கா தொடர்பாக கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரையை வரவேற்று ஒரு நண்பர் கருத்து தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்காவை ஓரளவுக்காவது கிளீன் பண்ணக்கூடிய இடம் சுற்றுச்சூழல் விவகாரங்கள் தான் என்பதை ஏற்றுக் கொண்ட அவர் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தார். நீண்ட தூரப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை சிரம பரிகாரத்துக்காக நிறுத்தும் இடங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளை அவர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து வழியில் பேருந்துகள் இடைநிறுத்தப் படுகின்ற உணவகங்களில் உள்ள கழிப்பறை வசதிகளைக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

நண்பர் அதை எனக்குக் கூறுவதற்கு முன்னரே நாட்டின் அரசுத் தலைவராகிய அனுர. கிளீன் ஸ்ரீலங்காவை அறிமுகப் படுத்தும் பொழுது நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றியிருந்தார்….."

நம் நாட்டுப் பெண்கள் கழிப்பறைக்குச் செல்ல இந்த நாட்டில் சுத்தமான கழிப்பறை அமைப்பு இருக்கிறதா என்பதும் கேள்விக்குரியாகும். தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் சில பெண்கள் வீடு வரும் வரை தண்ணீர் அருந்துவதில்லை. சுத்தமான கழிப்பறை கட்டமைப்பொன்று இல்லாமையே அதற்கு காரணமாகும். கழிப்பறை கட்டமைப்பு கட்டப்பட்டாலும் சமூகத்தில் நல்ல மனப்பான்மை கட்டியெழுப்பப்படவில்லை. சாதாரண மக்களுக்கு பொது இடமாக அன்றி அவை அழிவுகரமான இடமாக மாறியுள்ளன. இதனால் என்ன தெரிகிறது? இது எமது நாட்டு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவிடம் காணப்படுகின்ற அணுகுமுறையாகும். எனவே தூய்மையான இலங்கை வேலைத் திட்டத்தின் ஊடாக அவ்வாறான மனோபாவத்தையும் மாற்ற எதிர்பார்க்கின்றோம்.”

அனுர அவ்வாறு பேசியபோது தான் எனக்கு ஒரு விடயம் தெரிந்தது என்ன வென்றால்,தமிழ்ப் பெண்களைப் போலவே சிங்கள முஸ்லிம் பெண்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை அதுவென்று. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணப் போக்குவரத்து நேரம் கிட்டத்தட்ட ஏழு மணித்தியாலம். இக்காலப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் நீர் அருந்துவதில்லை. ஏன் என்று கேட்டால் இடையில் அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக நிறுத்தும் இடங்களில் சிறுநீர் கழிக்க முடியாது.அவை அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். அந்த இடத்தை நெருங்கும் பொழுதே துர்வாடை வீசும். அந்த இடத்தில் கால் வைப்பதற்கே கூசும். முறிகண்டியில் கட்டணம் செலுத்தும் கழிப்பறைகள் உண்டு. அங்கேயும் நிலைமைகள் பாராட்டும் அளவுக்குச் சுகாதாரமாக இல்லை.

பொதுக் கழிப்பறைகளை தொடர்ச்சியாகக் கழுவி. துப்புரவாகப் பேண மாட்டார்கள். அந்த அசிங்கத்துக்குள் போனால் சகல நோய்களும் தொற்றிக் கொண்டு விடும் என்ற அச்சம் ஏற்படும். எனவே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நரகத்துக்குள் போவதை விடவும். சிறுநீரை 6 மணித்தியாலங்களுக்கு அடக்கி கொண்டிருப்பதை விடவும், நீரைக் குடிக்காமல் விடலாம் என்று ஒரு பகுதி பெண்கள் கருதுகிறார்கள். இதுவும் ஆபத்தானது. நீண்ட தூரநீண்ட நேரப் பயணங்களில் நீரிழப்பால் உடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம்.

அது சொகுசு வாகனம் தானே? குளிரூட்டப்பட்டது தானே? நீர் இழப்பு குறைவாக இருக்கும் என்று ஒரு விளக்கம் கூறப்படலாம். அவ்வாறு சொகுசு வாகனம். சொகுசுப் பயணம் என்று கூறி அதற்குத் தனியாகப் பணம் அளவிடும் வாகன உரிமையாளர்கள் ஏன் தாங்கள் வாகனங்களை நிறுத்தும் இடங்களிலும் சொகுசான. வளமான. சுகாதார வசதிகளைக் கொண்ட கழிப்பறைகளைக் கட்டக் கூடாது? பொதுப் போக்குவரத்து வாகனங்களை சாப்பாட்டு இடைவேளைக்காக அல்லது சிரம பரிகாரத்துக்காக எங்கே நிறுத்துவது என்பதனை பயணிகள் தீர்மானிக்க முடியாது. வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் தான் அதைத் தீர்மானிக்கிறார்கள். அது வாகன உரிமையாளருக்கும் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடைக்கும் இடையிலான ஒரு வணிக உடன்படிக்கை. இரு தரப்புக்கும் அங்கு லாபம் உண்டு. பயணிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் இந்த இரண்டு தரப்புக்கும் பயணிகளுக்கான கழிப்பறைகளை சுகாதாரமாக பேண வேண்டிய பொறுப்பு உண்டு.



அவர்கள் வாங்கும் பயணச் சீட்டுக்குள் அந்தச் செலவும் அடங்குகிறது. பயணிகளின் கழிப்பறை வசதிகளை சுகாதாரமாகப் பேண வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்கும் சேர்த்துத் தான் கட்டணம் அளவிடப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் நீண்ட தூரப் பயணங்களில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அவர்கள் எந்தெந்த இடங்களில் நிறுத்துகிறார்களோ அந்த இடங்களில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இவை அனைத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

இந்த விடயத்தில் பெண்கள் படும் அவஸ்தை தெரிந்த ஒருவர் இப்பொழுது அரசுத் தலைவராக இருக்கிறார். எனவே அவர் இந்த விடயத்தில் உடனடியாகக் கை வைக்கலாம். வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தனி வாகனங்களில் பயணம் செய்கிறவர்கள் விரும்பிய,சுகாதாரமான, வசதியான இடத்தில் நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். குறைந்தது காட்டுப்பகுதிகளிலாவது வாகனத்தை நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். தென்னிலங்கை நகரங்களில் வளமான ரெஸ்ரோரன்களில் சுகாதார வசதிகள் கூடிய கழிப்பறைகள் உண்டு. ஆனால் பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்குத் தான் இந்தத் தண்டனை.

நாட்டின் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களில் சிறுநீரை அடக்கிக் கொண்டு பயணம் செய்கிறார்கள் அல்லது சிறுநீர் கழிப்பதை தவிர்ப்பதற்காக நீர் அருந்தாமல் சிறுநீர் பையை பழுதாக்குகிறார்கள் என்பது நாட்டின் வாழ்க்கை தரத்தை காட்டும் ஒரு குறிகாட்டி. சுகாதாரம், பால் சமத்துவம், பாதுகாப்பான பயணம் போன்ற பல்வேறு நோக்கு நிலைகளில் இருந்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஒரு நாட்டின் பொதுச் சுகாதாரக் குறிகாட்டிகளில் ஒன்று பொதுக் கழிப்பறையாகும். மேற்கத்திய பண்பாட்டில் பொதுக் கழிப்பறைகள் பெரியவைகளாகவும் சுத்தமானவர்களாகவும் இருக்கும். அவற்றைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பார்கள். அவை பெருமளவுக்கு உலர் கழிப்பறைகள் தான். அவற்றை தொடர்ச்சியாகச் சுத்தமாகப் பேணும் ஒரு பண்பாடு அங்கு வளர்ந்திருக்கிறது. கழிப்பறைகளைப் பராமரிப்பது மட்டுமல்ல பொதுமக்கள் கழிப்பறைகளைச் பொறுப்போடு சுத்தமாக சுகாதாரமாகப் பயன்படுத்துவதும் ஒரு பண்பாடுதான். அந்தப் பண்பாடு அங்கே வளர்ந்திருக்கிறது. அது அந்த சமூகங்களின் சமூகத் தராதரத்தை விழுமியங்களை கூட்டுப் பொறுப்புணர்ச்சியை வெளிக்காட்டும் விடயங்களில் ஒன்று. ஆனால் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நிலைமை அவ்வாறு இல்லை.பொதுக் கழிப்பறை என்றாலே அசுத்தமானது. அருவருப்பானது. துர் வாடை வீசுவது. இலையான் மொய்ப்பது என்று நிலைமைதான் பொதுப் போக்காக உள்ளது.



மேட்டுக்குடி அரசியல் பாரம்பரியத்தில் வராத அனுர இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியது வரவேற்கத் தக்கது. அதேசமயம் அவர் கூறுவது போல நெடுந்தூரப் பயணங்களில் தமிழ் நோக்கு நிலையில். இது ஒன்று மட்டும் தான் விவகாரம் இல்லை என்று வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் முறைப்பாடு செய்கிறார்கள். நீண்ட தூரப் பயணங்களில் குறிப்பாக இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயண வழியில் தமது வாகனங்கள் அடிக்கடி பொலிசாரால் மறிக்கப்படுவதாக அவர்களி குற்றம் சாட்டுகிறார்கள். அவ்வாறு மறிக்கப்பட்ட போலீஸ் நிலையத்துக்கும் நீதிமன்றத்துக்கும் அலைக்கழிக்கப்படுவதை விடவும் அவர்கள் கேட்கும் காசைக் கொடுத்து விட்டு ஓடித் தப்புவது தான் புத்திசாலித்தனமானது என்று பல சாரதிகள் கருதுவதாக ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு.

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



இந்த நடைமுறை தமிழர்களுடைய பயண வழிகளில் தான் அதிகமாக உண்டு என்றும் தென்னிலங்கையில் ஏனைய நெடுந்தூரப் பயண வழிகளில் இந்தளவுக்குச் சோதனைகள் இல்லை என்றும் ஓர் ஒப்பீடு உண்டு. போர்க் காலங்களில் தமிழ் மக்கள் அதனை தமக்கு எதிரான கூட்டுத் தண்டனையின் ஒரு பகுதியாக விளங்கி வைத்திருந்தார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாகவும் அந்தத் தண்டனை தொடர்கிறதா? அப்படியென்றால் அதை உடனடியாக நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஏனென்றால் நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவரால் தமிழ்ச் சாரதிகளும் வாகன உரிமையாளர்களும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா இல்லையா என்பதனை விசாரித்து அறிவது கடினமானது அல்ல.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கமும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஓர் அரசுத் தலைவரும் நினைத்தால் முடிவுக்கு கொண்டு வரக்கூடிய விடயங்கள் இவை. அரசியல் பொருளாதாரத் தளங்களில் அரசாங்கத்துக்கு வரையறைகள் உண்டு.வெளி நிர்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் பொதுக் கழிப்பறைகள் சுகாதாரமாகப் பேணப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் பொது போக்குவரத்து வாகனங்கள் குறிப்பாக தமிழ் வாகனங்கள் போலீசாரால் அதிகம் மறைக்கப்படுகின்றனவா என்பதனை விசாரிப்பதற்கும் அரசாங்கத்தால் முடியும். உடனடியாக முடியும். சிறிலங்காவை கிளீன் பண்ணக்கூடிய சாத்தியமான இடங்கள் இவை. அரசாங்கம் அதைச் செய்யுமா?

கடந்த தைப் பிறப்பிலன்று வன்னியிலிருந்து ஒரு குடும்பம் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. முன்னிரவு வேளை. கும்மிருட்டுக்குள் நின்று போலீசார் மறித்தார்கள்..கள்வர்களைப் பிடிப்பது போல மறைவில் நின்றார்கள். அங்கே தெருவிளக்குகள் இருக்கவில்லை. போலீசாரிடம் டோர்ச் லைட்கள் (22ம் பக்கம் பார்க்க)

# கயிற்றில் நடக்கும் வித்தை

மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வின் சீனப் பயணத்தில் மிக முக்கிய மான பல உடன்பாடுகள் கையெழுத் திடப்பட்டிருக்கின்றன. கடந்த செப்டெ ம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த ஜனாதி பதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த மாதம் இந்தியாவுக்கு பயணத்தை மேற்கொண்டு இருந்தார். அதனை தொடர்ந்து அவர் இரண்டாவது வெளிநாட்டு பயணத்தை கடந்த 14ஆம் திகதி சீனாவுக்கு மேற்கொண் டார்.

இந்தியப் பெருங்கடலில் மிக முக்கிய த்துவம் வாய்ந்த அமைவிடத்தில் உள்ள இலங்கைத்தீவை, தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தொடர்பாக, இந்தியாவுக்கும் சீனா வுக்கும் இடையே ஆதிக்கப் போட்டி நிலவி வருகிறது. இலங்கையின் மூலோபாய அமைவிடம் காரணமாக இரண்டு நாடுகளுக்கும் இது ஒரு முக்கியமான போட்டியாக மாறி இருக்கிறது.

ஏட்டிக்கு போட்டியாக முதலீடுகளை செய்வதும் செல்வாக்கை அதிகரிப்ப தற்கு முயற்சிப்பதும் வழக்கமானவை யாகி விட்டன. இலங்கையின் ஆட்சி யாளர்கள் காலத்துக்கு காலம் ஏதோ ஒரு நாட்டுக்கு சார்பாக செயற்பட முனைந்ததன் விளைவாக, மற்றைய நாட்டின் அதிருப்தியை சம்பாதித்து கொண்டார்கள்.

காலப்போக்கில் இதுவே ஒரு பிரச் சினையாக மாறியது. அதனால் இர ண்டு நாடுகளுக்கும் பொதுவான ஒரு, நிலைப்பாட்டில் இருப்பது என

இவ்வாறான நிலையில், சீனப் பயணத் தின் போது மிகப்பெரிய முதலீடுகளை பெற்றுக் கொள்வதில் அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றிருக்கிறார். 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெ முத்திடப் பட்டிருக்கின்றன. அவற்றில் மிகச்சிலவற்றைப் பற்றிய தகவல்களே



வெளிவந்திருக்கின்றன. சில வேளை ஜனாதிபதி அநுரகுமார் திசாநாயக்க அடுத்த பாராளுமன்ற அமர்வில், இந்த பயணம் தொடர்பாக விளக்கம் அளிக் கக் கூடும். அதன்போது மேலதிக தகவல்களை அவர் வெளிப்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேவேளை, அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவிருக்கும் இந்த எண் ணெய் சுத்திகரிப்பு ஆலை, நாளொ ன்றுக்கு இரண்டு இலட்சம் பீப்பாய் எண்ணெயை உற்பத்தி செய்யக் கூடி யது என தகவல்கள் வெளியிடப்பட்டி ருக்கின்றன.

2 இலட்சம் பீப்பாய்கள் என்பது, இலங்கையின் நாளாந்த எரிபொருள் தேவையை விட மிகமிக அதிக மானது. இலங்கையில் 2019ஆம் ஆண்டு அதிகபட்சமாக ஒரு நாளில் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பீப்பாய்

முயற்சித்த எந்த ஆட்சியாளர்களும் அதில் பெரிதாக வெற்றி பெறவில்லை. ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான ஒரு முயற்சியை எடுத்தார். ஆனால் கயிற் றில் நடக்கும் அந்த முயற்சியில் அவரும் வெற்றி பெறவில்லை. இந்திய சார்பாளர் என்றே அடையாளப்படுத்தப் பட்டார். அந்த அளவிலேயே அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்திரு க்கும் அநுரகுமார திசாநாயக்க, இடது சாரி, மார்க்சிஸ்ட் என்றெல்லாம் அடையாளப்படுத்தப்பட்டவர். அவர் சீனாவுக்கு சார்பாக இருப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவர் இந்தியாவையும் சமா ளிக்க முற்பட்டார். இந்தியப் பயணத் தின் போது அவர் நெகிழ்வுப் போக்கை கையாண்டார். புதுடில்லியை பகைத் துக் கொள்ளாத வகையில் அதற்கு சார்பான முறையில், செயற்பட இணங் கியதன் மூலம், புதுடில்லி பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார். அதற்கடுத்து, இப்பொழுது சீனப் பயணம் இடம் பெற்றிருக்கிறது.

சீனப் பயணத்துக்கு முன்னதாகவே, அவரது இந்தப் பயணம் சவால்மிக்க தாக இருக்கும் என கருதப்பட்டது. அநுரகுமார திசாநாயக்கவை சீனா இந்தியாவுக்கு இடையே தடுமாறும் ஒருவராக அனைத்து ஊடகங்களும் ஏராளமான கேலிச்சித்திரங்களை வெளி யிட்டன. அண்மைக்காலத்தில் ஒரு விடயத்தை அடிப்படையாக வைத்து அதிகளவு கேலிச்சித்திரங்கள் வரை யப்பட்டது இதுவாகத்தான் இருக் கும்.

ஏனென்றால், ஒரு பக்கம் இந்தியாவை சமாளிக்க வேண்டும். இன்னொரு பக்கம் சீனாவை அரவணைக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் கையாளுவது சிக்கலானது, சிரமமானது. அதனை இது வரை யாரும் வெற்றிகரமாக செய்யவில்லை. அநுரகுமார திசாநாயக்கவினால் அதை செய்ய முடியுமா என்பதை இப்போது உடனடியாக கணிக்க முடியாது.

வெளிப்படுத்தாமல் போனாலும் ஆச்ச ரியம் இல்லை. ஏனென்றால், சீனாவும் சரி, இலங்கையின் இப்போதைய அரசாங்கமும் சரி, முற்றுமுழுதாக வெளிப்படைத் தன்மையை கடைப் பிடிக்கும் தரப்புகள் அல்ல.

சீனா எல்லா தகவல்களையும் மறைக் கின்ற வெளிப்படுத்தாமல் இருக்கின்ற நாடு. தற்போதைய அரசாங்கமும் அளவுக்கு அதிகமாக ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதில்லை. மட்டு ப்படுத்தப்பட்ட தகவல்களையே கொடு க்கின்றது. அவற்றையும் அதிகார பூர்வமான சிலர் மூலம் மட்டுமே பெற முடிகின்றது. பெரும்பாலான தகவல் கள் இரகசியமாக வைக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட நிலையில் சீனப் பயணத்தின் போது கையெழுத்திடப் பட்ட 15 புரிந்துணர்வு உடன்பாடுகள் தொடர்பான முழு விபரங்களும் வெளிப் படுத்தப்படுமா என்பது சந்தேகம். ஆனால், இந்தப் பயணத்தின் போது அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவுவது தொடர்பான உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டுள்ளது.

சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டிருக்கும் இந்த உடன்படிக்கை மூலம் 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடு கிடைக்கவுள்ளது. இது தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் கிடைத்துள்ள மிகப் பெரிய வெளி நாட்டு முதலீடாகும். ஆனால், இந்த முதலீடு டொலர்களில் மேற்கொள்ளப் படுமா? அல்லது சீனாவின் யுவான் நாணயத்தில் முதலீடு செய்யப்படுமா என்பது என்பது முக்கியமான கேள்வி யாக இருக்கிறது. டொலரில் முதலீடு செய்வது, மட்டுமே இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்பு நெருக்கடியை குறைப்பதற்கு உதவும்.

மாறாக சீனா முன்னர் யுவானில் கடன் களை வழங்கியது போல, இந்த முத லீட்டை மேற்கொள்ளுமானால், அது தற்போதைய வெளிநாட்டு நாணய நெருக்கடிக்கு தீர்வாக இருக்காது.

எரிபொருள் நுகரப்பட்டது. அதன் பின்னர், 2021 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 16 ஆயிரம் பீப்பாய்களாக எண்ணெய் நுகர்வு குறைந்தது. 2022ஆம் ஆண்டு, இந்த எண்ணி க்கை 98 ஆயிரம் ஆக குறைந்தது. வாகனங்கள் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டால், எண்ணெயின் தேவை அதிகரிக்க வாய்ப்புகள் இருந்தாலும், எரிபொருள் விலை அதிகமாக இருப் பது, அதன் நுகர்வை குறைத்திரு க்கிறது.



2019ஆம் ஆண்டில் போன்று அதிக பட்சமாக ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பீப்பாய் எண்ணெய் ஒரு நாளில் நுகரப்படுகின்ற சூழல் ஏற்பட்டாலும் கூட, 65 ஆயிரம் பீப்பாய் எண்ணெய் நாளொன்றுக்கு மிகையாக உற்பத்தி செய்யப்படும். அதனை வெளிநாடுகளு க்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் சீனாவுக்கு இருக்கிறது. ஆனால் இப்பொழுது இலங்கையின் எரி பொருள் தேவையில் மிகச் சிறிய பகுதியை மாத்திரமே சினோபெக் விநியோகிக்கிறது. இங்கு பெற்றோ லியக் கூட்டுத்தாபனம், தன்னிடம் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பொருளை இறக்குமதி செய்கிறது.

இந்தியாவின் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தமது எரிபொருள் நிரப்பு நிலையங் களின் ஊடாக, கணிசமானளவு எரி பொருள் விற்பனையில் ஈடுபடுகிறது. அமெரிக்காவின் செல் நிறுவனமும் சில்லறை எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடுகிறது. இப்படி இருக்க, சினோ பெக் நிறுவனம், நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் பீப்பாய் எரி பொருளை சுத்திகரிக்குமேயானால், அதில் பாதியை விட அதிகமானதை

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும். அவ்வாறான, எரிபொருள் ஏற்றுமதி சந்தை இலங்கையில் இருக்கிறதா என்ற கேள்வியும் இருக்கிறது.

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்படுவது, அங்கு சீனாவின் பிரசன்னத்தையும் முதலீட்டையும் அதிகரிக்க வழிவகுக் கும். ஏற்கெனவே அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் வசம் உள்ளது. அதற்கு அருகில் சீனாவின் எண் ணெய் சுத்திகரிப்பு ஆலை அமையும் போது, அங்கு இன்னமும் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கான சூழல் ஏற்படும்.


அதைவிட இந்தியாவின் எண்ணெய் வளமுதலீடுகளையும் இது பாதிக்கும். 2015 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முதல்முறையாக இலங்கைக்கு வந்த போது திருகோணமலையை தெற்காசியாவின் எண்ணெய் கேந்திரமாக மாற்றுவதாக கூறியிருந்தார். அப்போது, இரண்டு நாடுகளின் தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் கூடஅந்த விடயம் இடம் பெற்று இருந்தது. ஆனால், சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை பெரியளவில் அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா முன்வரவில்லை.

அதன் விளைவாகவே சீனா இப் பொழுது எண்ணெய் விநியோகத்தை கைப்பற்றும் சூழல் உருவாகி இருக்கிறது. இந்தியாவின் ஆதரவுடன் சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை செயற்பட வைக்கப் போவதாக அரசா ங்கம் கூறினாலும் இந்தியா அதற்கு இணங்குமா என்ற கேள்வி இருக் கிறது.

ஏனென்றால் சீனா இந்தளவு பெரிய முதலீட்டுக்கு இணங்கியுள்ள நிலை யில், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணெய் நுகர்வை கொண்ட ஒரு நாட்டில், ஏட்டிக்கு போட்டியாக பெருமளவு முதலீட்டைச் செய்வதால் தமக்கு பயன் கிடைக்காது என்றே இந்தியா சிந்திக்கும்.

இவ்வாறான நிலையில், சீன பயணத் தின் போது, பெறப்பட்ட முதலீடுகளும், செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை களும் தொடர்பாக, இந்தியா எத்தகைய பிரதிபலிப்பை வெளிப்படுத்தப் போகி றது?

# வரலாற்றின் எதிர்பார்ப்பு!




மாற்றங்களை உருவாக்க வேண்டும்' என்ற பிரகடனத்தோடு அதிகாரத்துக்கு வந்திருக்கும் அநுரகுமார திசநாயக்கவின் (NPP) அரசாங்கம், என்ன செய்கிறது? நம்பிக்கை தரக்கூடிய முயற்சிகள் ஏதாவது நடக்கிறதா..?' என்று பலரும் கேட்கிறார்கள். மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு அந்த மாற்றம் ஆரம்பித்துள்ளதா? அதற்கான பணிகள் நடக்கிறதா? என்ற எதிர்பார்ப்புள்ளது. எவ்வளவுக்கு விரைவாக மாற்றங்கள் நடக்கிறதோ அந்தளவு மக்களுக்கு நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு. ஆகவே அவர்கள், அந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள்.

புதிய (தேசிய மக்கள் முன்னணி) அரசாங்கம் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துகிறது ஏற்படுத்தவுள்ளது என்ற எதிர்பார்ப்போடு இலங்கைக்கு வெளியே இருப்பவர்களும் காத்திருக்கிறார்கள். ஏனென்றால், அநுர குமார திசநாயக்க தரப்பின் வெற்றி, தென்னாசியப் பிராந்தியத்தில் புதிய அரசியற் பண்பாடொன்றுக்கான இடது நிலை அரசியலுக்கான அடித்தளமாக அமையக் கூடும். அதற்கான முன்மாதிரியை (Exemplary) உருவாக்கலாம் என்பது மக்களுக்கான அரசியலை மாற்று அரசியலை (Alternative politics) முன்னெடுக்க முயற்சிப்போருடைய எதிர்பார்ப்பாகும்.

மட்டுமல்ல, எதிர்த்தரப்பான மக்கள் விரோத அரசியலை (Anti-people politics) முன்னெடுக்கும் பேராதிக்க பெருமுதாளித்துவ காப்பரேட் அரசியலாளர்களுக்கு (Corporate politicians) இன்னொரு வகையான எதிர்பார்ப்புண்டு. காரணம், இது இலங்கையில் அடிப்படை மாற்றத்தை உருவாக்கும் அரசியல் நடவடிக்கை (Political action to create change) என்பதால், அதனுடைய சாத்தியம், அதைச் செயற்படுத்தும் முறைமை, அதற்கான ஆளுமை வெளிப்பாடு போன்றவற்றையெல்லாம் அவர்கள் அறிய விரும்புகின்றனர். குறிப்பாக இந்த அரசாங்கத்தினுடைய வெற்றி தோல்விகளை அவர்கள் கவனிக்க வேண்டிய கட்டாயமுள்ளது.

இப்படிப் பல தரப்பிலும் இலங்கைப் புதிய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் குறித்த அவதானிப்பும் எதிர்பார்ப்பும் தீவிரமடைந்திருக்கிறது. வழமைக்கு மாறான முறையைக் கொண்ட இடது நிலையாளர்களின் அரசியல் நடவடிக்கை இது என்பதால் 'இலங்கை மாதிரி'யை (Model of Sri Lanka) அறிவதற்கு எல்லோரும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள்.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் கிடைத்திராத பேராதரவு அநுர குமார திசநாயக்கவின் (NPP) அரசாங்கத்துக்கே கிடைத்திருக்கிறது. 75 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி அதிகாரத்திலிருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டுக்கும் வெளியே இருந்தொரு தரப்பு இப்பொழுது தான் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. அதுவும் இடதுசாரிய அரசியற் கோட்பாட்டோடு, ஆயுதப் புரட்சியை முன்னெடுத்துத் தோற்கடிக்கப்பட்ட தரப்பு, ஜனநாயக வழி முறையான தேர்தலில் பெருவெற்றியைப் பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது. இது மக்களிடையே ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் வெளிப்பாடாகும் வெற்றியாகும். எனவே மக்களும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போரும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதால் மாற்றத்தைக் குறித்து புதிய நடவடிக்கைகளைக் குறித்த எதிர்பார்ப்பு வலுத்திருக்கிறது.

இங்கே இன்னொரு விடயத்தையும் நாம் கவனித்துப் பேச வேண்டியுள்ளது. இலங்கையில் இனத்துவச் சிக்கல்களும் தீவிர பிரச்சினைக் குரியவை. தனியே பொருளாதார அடிப்படையிலான மாற்றம் மட்டும் நாட்டை நிறைவாக்கி விடாது. இன முரண்பாடுகளுக்கான தீர்வையும் காணும்போதே நாட்டில் மெய்யான மாற்றம் நிகழும். நாடு பின்னடைந்திருப்பதற்கு இனத்துவ முரண்பாடும் அதன் விளைவான 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரும் பிரதான காரணம். இந்தப் போரில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஏறக்குறைய ஒரு லட்சம் வரையானோர் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நாட்டின் மனித வள இழப்பாகும். இதற்குப்பால் போரிலே கோடிக்கணக்கான பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. மனித உழைப்பு வீணடிக்கப்பட்டிருக்கிறது. மீளவே உருவாக்க முடியாத அளவுக்குப் பண்பாட்டு இழப்பு, இயற்கை வள இழப்பு எல்லாம் நிகழ்ந்திருக்கிறது. அதை விட சொத்துகள், வீடு, ஊர் போன்ற மக்களுடைய உருவாக்கங்கள் அனைத்தும் இழப்புக்குள்ளாகியுள்ளது. ஆகவே பொருளாதார முன்னேற்றத்தோடு இனப் பிரச்சினைக்கான தீர்வையும் இணைத்தே ஒரு மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

இன ஒடுக்குமுறையின் காரணமாக 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் பேசும் தரப்பினர் மேற்கொண்டு வந்த (சமூக மற்றும் புவிசார்) பிராந்திய அரசியற் செல்வாக்கை உடைத்து தேசிய மக்கள் சக்தி வெற்றியைப் பெற்றுள்ளது. கூடவே சிங்கள மக்களிடத்திலும் பேராதரவு. ஆக மொத்தத்தில் நாடு தழுவிய அளவில் முழுமையான செல்வாக்கைப் பெற்றுள்ள அரசாங்கம் என்ற வகையில் இந்த எதிர்பார்ப்புக் கேள்விகள் பல முனைகளிலிருந்தும் எழுகின்றன.

ஊழல் ஒழிப்பு, பொருளாதார மறுசீரமைப்பு, அரசியமைப்புத் திருத்தம், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு, அதிகார துஸ்பிரயோகத்துக்கு முடிவு, நாட்டைச் சூறையாடியோரை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை, இனப்பிரச்சினை உள்ளிட்ட அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு, கிராமங்களின் வளர்ச்சி, பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றம், கல்வியில் மறுசீரமைப்பு என பல விடயங்களிலும் முன்னுதாரணமான மாற்றத்தை முன்னேற்றத்தை உண்டாக்குவதாகவே அநுரவின் அரசாங்கத்தின் பிரகடனமாகும். அதாவது இவற்றைச் செய்வதற்கான System change ஐ செய்வதாக.

அப்படிச் System change ஐச் செய்வதாக இருந்தால் காலதாமதத்தைச் செய்யாமல் உடனடியாகவே அதற்கான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்றே வலியுறுத்தப்படுகிறது. உண்மையும் அதுதான். தாமதித்தால், System changeக்கு எதிரான அல்லது மாற்றத்துக்கு எதிரான சக்திகள் (Forces against change) எழுச்சியடைந்து விடும் அபாயமுண்டு. இது தான் முன்பும் நடந்தது. முன்னைய ஆட்சித் தரப்புகளிற் சில (1994இல் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம், 2015 மைத்திரிபால ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம்) மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதற்கு முயற்சித்தன. குறிப்பாக இனப் பிரச்சினைக்கான தீர்வையும் அரசியலமைப்பு மாற்றத்தையும். ஆனால், அதைச் செய்வதற்கு அவை எடுத்துக் கொண்ட கால தாமதம், உட் குழப்பங்கள், கரிசனைக் குறைவு போன்ற வற்றின் காரணமாக தீர்வுகளுக்கு எதிரான சக்திகள் (Forces against solutions) அதைக் குழப்புவதற்கு வாய்ப்பாகியது.

ஆகவே இந்த வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் விரைந்து செயற்பட வேண்டியது NPP அரசாங்கத்திற்கு அவசியமாகும். ஆனால், மக்களுடைய எதிர்பார்ப்புகளின் அளவுக்கு அரசாங்கத்தின் வேகம் போதாமலே உள்ளது. மாற்றங்களை நிகழ்த்துவோம். மக்களுடைய நம்பிக்கையைப் பாதுகாப்போம்' என்று ஒவ்வொரு நாளும் அமைச்சர்களும் அரசுப் பிரதானிகளும் பேசிக் கொண்டும் அறிக்கை விட்டுக் கொண்டுமிருக்கிறார்களே தவிர, எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு மாற்றங்கள் பெரிதாக நிகழவில்லை. பறவையின் வேகம், முயலின் வேகம், பாம்பின்வேகம், ஆமையின் வேகம், நத்தையின் வேகம் என்றெல்லாம் சொல்வார்களே, இங்கே நத்தையின் வேகத்திற் கூட நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

பெரிய அளவிலான மாற்றங்களை எதிர்பார்த்த மக்களுக்குச் சிறிய அளவிலான தொடக்கங்கள் ஏற்படவில்லையென்றால் ஏமாற்றம் ஏற்படும். நாளாந்த உணவுக்குப் பயன்படும் அரிசியின் விலையைக் கூடக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகிறது அநுர அரசாங்கம். இதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தோடு மூன்று சுற்றுப் பேச்சுகளை நடத்தி விட்டார். இருந்தும் நிலைமையில் மாற்றம் ஏதுமில்லை. அந்தளவுக்கு மா:.பியாக்கள் பலமாக உள்ளனர். என்பதால் மாற்று ஏற்பாடாக இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் அரிசியை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது அரசாங்கம். இது விவசாயிகளுக்கு உடன்பாடில்லாத சங்கதி. இப்படியே ஒவ்வொன்றிலும் பல சிக்கல்கள் உள்ளன.

என்னதானிருந்தாலும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தே தீர வேண்டும். தடைகளை உடைத்தே ஆக வேண்டும். இதற்கு வாய்ப்பாக முதலில் எந்தெந்த வேலைகளைச் செய்ய வேண்டும்? என்பதை முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்திக்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




கொள்ளலாம். இரண்டாவது, சாத்தியங்களை உருவாக்குவது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். சாத்தியக் குறைவுகளிருந்தால், அவற்றை எப்படி நிர்வகிக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். இதெல்லாவற்றையும் முற்கூட்டியே சிந்தித்த படியாற் தானே System change ஐப் பற்றி NPP பேசியது? அப்படிப் பேசிய நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்த NPP யினால் ஏன் அவற்றை விரைவாக முன்னெடுக்க முடியவில்லை? ஏன் தாமதித்துக் கொண்டிருக்கிறது? என்ற கேள்வி எழுகிறது. மாற்றங்களுக்கான நடவடிக்கை (Action for changes) என்பது நிச்சயமாக மாற்று நடவடிக்கையாகவே அமையும். வழமையான நடவடிக்கைப் பொறிமுறைகளுக்கூடாக மாற்றங்களைச் செயற்படுத்த முடியாது. மாற்று நடவடிக்கை என்பது ஏறக்குறைய அதிரடி நடவடிக்கையே. ஆனால், அப்படி அதிரடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எல்லாச் சந்தர்ப்பத்திலும் முடியாது. சட்டமும் விதிமுறைகளும் (Law and Regulations) ஏற்கனவே உள்ள ஞூலளவநஅ மும் தடையாக இருக்கும். அப்படித்தான் இருக்கிறது. அப்படியென்றால் என்ன செய்வது?

இதுதான் இப்பொழுதுள்ள சிக்கலே. இதற்கு மாற்றுப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அதை விரைந்து செய்வதன் மூலமே மேயின் பிரகடனங்களை நிறைவேற்ற முடியும். அதற்குத்தான் மக்களின் ஆணை தாராளமாக உண்டே. ஆகவே தாமதம் செய்யாமல் அரசாங்கம், மாற்றங்களுக்கான அடிப்படை மாற்றங்களை (Basic changes) செய்ய வேண்டும். இதை NPP ஏற்கனவே முன்னுணர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், நீண்ட காலமாக கெட்டி தட்டிப் போயிருக்கும் அரசியல் மற்றும் நிர்வாக முறைகேடுகளை இலகுவாகச் சீர்ப்படுத்த முடியாது. அதுவும் ஜனநாயக வழியில். ஆனால், ஜனநாயக நெறிமுறைகளின்படியே தான் அதைச் செய்யவும் வேண்டும். அப்படியென்றால் அடிப்படை மாற்றங்களைச் செய்தால்தான் மக்கள் எதிர்பார்க்கின்ற நாட்டுக்குத் தேவையான மாற்றங்களை உருவாக்க முடியும். இந்த நெருக்கடியிலிருந்து இந்தச் சிக்கலிலிருந்து வெளியேற முடியும்.

இதற்கான பயில்காலமாகவும் பயில்களமாகவும் NPP அதிகாரத்துக்கு வந்த பின்னரான இரண்டு மாதங்களும் ஆட்சிக்களமும் உண்டு. இந்த அனுபவங்களைக் கொண்டு இனி மேற்பார்க்க வேண்டிய காரியங்களை விரைவுபடுத்த வேண்டும். இது அநுர (20ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08121123 F**
26yrs, 5'7" , Single , Hastham , N/A Sevai , High School , No work , Sri Lanka

**ID08121122 F**
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08121119 F**
46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai , Bachelors.. , Law Clerk , Canada

**ID08121116 F**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India

**ID08121115 F**
24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada

**ID08121111 F**
37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121110 F**
33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada

**ID08121109 F**
34yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Counselor , Canada

**ID08121107 F**
28yrs, 5'4" , Single , , Sevai , Bachelors.. , IT , Switzerland

**ID08120320 F**
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054 F**
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603 F**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509 F**
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124 F**
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Sevai , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732 F**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 F**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121106 F**
21yrs, 5'4" , Single , Mrigasheersham , 7 Sevai , High School , Beautify Parlour , Canada

**ID08121100 F**
26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka

**ID08121099 F**
21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada

**ID08121095 F**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India

**ID08121089 F**
24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai , Masters Degree , Admin , Canada

**ID08120650 F**
50yrs, 5'4" , Seperated , Pooram , N/A Sevai , Postgraduate.. , Social Worker , Canada

## மணமகன்



**ID08121120 M**
32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka

**ID08121118 M**
35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Sri Lanka

**ID08121097 M**
33yrs, 5'6" , Single , Mrigasheersham , 6 Sevai , Bachelors.. , Technician , Canada

**ID08121094 M**
27yrs, 5'7" , Single , Kettai , 11 Sevai , Ph.D , Scientist , Canada

**ID08121093 M**
34yrs, 5'7" , Single , Moolam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada

**ID08121092 M**
31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08121090 M**
39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Warehouse.. , Canada

**ID08121088 M**
35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka

**ID08121079 M**
29yrs, 5'6" , Single , Rohini , 4 Sevai , Bachelors.. , Civil Engineer , Canada

**ID08117127 M**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686 M**
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639 M**
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583 M**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564 M**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356 M**
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270 M**
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144 M**
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698 M**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481 M**
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778 M**
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404 M**
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828 M**
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978 M**
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734 M**
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08121105 M**
34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08121104 M**
35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada

**ID08121103 M**
34yrs, 5'11" , Single , Aayilyam , 11 Sevai , Postgraduate.. , Asst Manager , Canada

**ID08121102 M**
22yrs, 5'5" , Single , Aswini , Sevai , Bachelors.. , Customer Service.. , Sri Lanka

**ID08121101 M**
36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08121098 M**
39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Transportation .. , Canada

# பட்டதாரிகளின் போராட்டமும் அரசின் பொறுப்பும்

ஆட்சி மாறினாலும் சில காட்சிகள் மாறாது என்பார்கள். அப்படித்தானுள்ளது வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டமும். முந்திய அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்திலும் தமக்கு அரசாங்கம் வேலை வழங்க வேண்டும் என்று கேட்டுப் போராடினார்கள். இப்போதைய ஆட்சியின் போதும் போராடுகிறார்கள். இதற்காக 'வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்' என்ற பேரில் ஒரு அமைப்பே உண்டு. அந்தச் சங்கம் தொடர்ந்தும் புதுப்பிக்கப்படுகிறது. அதுவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போராட்டங்களை நடத்துகிறது.

பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வரும் ஒவ்வொரு தலைமுறையினரும் அந்தச் சங்கத்தில் இணைகிறார்கள். அதாவது பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது மாணவர் அமைப்பில் செயற்படுகின்றவர்கள், பட்டம் பெற்றவுடன் அப்படியே வந்து வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து விடுகிறார்கள். இதனால் இந்தச் சங்கம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து உயிர் வாழ்கிறது.

இந்தச் சங்கமே யாழ்ப்பாணத்தில் விளக்கு மாற்றை ஏந்தியும் தெருவைக் கூட்டியும் ஒரு அடையாளப் போராட்டத்தை நடத்தியுள்ளது. முன்பு ஆளுநர் அலுவலகத்தைச் சுற்றி வளைப்பார்கள். அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்னே நின்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இப்பொழுது சற்று வித்தியாசமாகத் தெருவைக் கூட்டியிருக்கிறார்கள். அதாவது தெருக்கூட்டுவதற்கே தமக்கு வழங்கப்பட்ட பட்டம் உள்ளது அல்லது தாம் பெற்றுக் கொண்ட பட்டம் பயன்படுகிறது என்ற விதமாக.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகவே இந்தத் தெருக்கூட்டும் காட்சி எதிர்விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. அரசாங்கத் தரப்பிலிருந்து மட்டுமல்ல, சமூக மட்டத்திலிருந்தும் இதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. வேலையற்ற நிலையை வெளிப்படுத்துவதற்கும் அதற்காகப் போராடுவதற்கும் பல வழிமுறைகள் இருக்கும் போது, தெருக் கூட்டுவதாகக் காட்டுவது அந்தத் தொழிலையும் அதைச் செய்யும் தொழிலாளர்களையும் அவமதிப்பதாகும் என்று பலரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

வேண்டுமானால், நகரத்தையோ தெருவையோ சுத்தப்படுத்துவதாக ஒரு முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்தியிருந்தால், அது வரவேற்பைப் பெற்றிருக்கும். மதிப்பைக் கூட்டியிருக்கும். அந்தக் கவனம் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கும். அப்படியெல்லாம் நடக்காமல் ஆவேசத்தைக் காட்ட முற்பட்டு மூக்குடைபட்டிருக்கிறார்கள், பட்டதாரிகள்.

ஆக, மக்களின் ஆதரவையும் இழந்த நிலையிலிருக்கும் இந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன? அதாவது இவர்களுடைய அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. அதுவும் புதிய அரசாங்கம் இந்த விடயங்களை (வேலையில்லாப் பட்டதாரிகளை) என்ன செய்யப்போகிறது? அதனுடைய கொள்கை வகுப்பில் இதற்கான தீர்வு என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பணி வழங்குதலே இதுவரையான நடைமுறையாக இருந்துள்ளது. குறிப்பாக அந்தந்தக் காலத்தில் ஆட்சியிலிருக்கும் அரசியற் தரப்பினர் தமது அரசியற் தேவைகளோடு இணைந்ததாக இந்தப் பணிச் சேர்ப்பைச் செய்துள்ளனர். ஏறக்குறைய அரசியல் நியமனங்களாக. இதனால், பணியில் சேர்ந்தவர்கள் அந்தந்த அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைப் போலச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியிருந்தது.



அத்தோடு ஆட்சியைப் பிடிப்பதற்காக வேலைவாய்ப்புகளை வழங்குவோம் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய பணிச் சேர்ப்பைச் செய்ததால், அரச நிறுவனங்களில் தேவைக்கு அதிகமானவர்கள் குவிந்து போயுள்ளனர். மட்டுமல்ல, வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே புதிய புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதெல்லாம் அரசாங்கத்துக்கு (மக்களுக்கு) சுமையாகவே இன்று மாறியுள்ளன. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு இதுவும் ஒரு காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் தான் அரச பணிகளில் உள்ளோரின் தொகையைக் குறைக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனை ஏற்புடையதே. இதையும் பட்டதாரிகள் அறிந்திருப்பார்கள். ஏற்கனவே பணியாளர் சுமையினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கம் எப்படிப் புதிதாக நியமனங்களை வழங்கும் என்ற தெளிவு அவர்களுக்கு வந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் இந்தக் கேள்வியாவது எழுந்திருக்க வேண்டும்.

எப்படிப் பழைய ஆட்களை தேவைக்கு அதிகமாக இருப்போரை வீட்டுக்கு அனுப்பலாம் அல்லது வேறு வழிகளில் அவர்களை ஈடுபடுத்தலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கும் போது, எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பிடிவாதம் செய்தால் என்னதான் செய்ய முடியும்?

இங்கேதான் நாம் படிப்பைப் பற்றியும் பட்டத்தைப் பற்றியும் கல்விச் சமூகத்தைப் பற்றியும் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. கல்வி என்பதும் உயர் கற்கை என்பதும் மனித அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்வதற்கான ஒரு பொறிமுறையும் ஏற்பாடுமேயாகும். குறிப்பாகச் சுயாதீனத்தை உருவாக்க வேண்டும்.

ஆனால், கவலைக்குரிய விடயமாக இருப்பது, படிக்காதவர்கள் சுயாதீனமாக இயங்குகின்ற அளவுக்குப் படித்தவர்களிற் பலரும் இயங்க முடியாமல் சார்ந்திருக்கவும் தங்கி வாழவும் முற்படுவதாகும். அந்தளவுக்குத் தான் இவர்களுடைய அறிவுத் திறனும் ஆளுமை விருத்தியும் குறைந்து நலிந்து போயுள்ளது. மட்டுமல்ல, பலர் வேலையில்லாமலே உள்ளனர். ஒரு பக்கம் வேலையில்லாப் பட்டதாரிகள் என்றால், இன்னொரு பக்கம் வேலையில்லாப் பணியாளர்கள் என்ற நிலையே காணப்படுகிறது. வெளிக்கள உத்தியோகத்தர்கள் என்ற பேரில் நியமிக்கப்பட்டோரில் பலரும் உரிய வேலைகளைச் செய்வதில்லை. பணியிடங்களில் இருப்பதுமில்லை. அவர்கள் அரசாங்கத்தின் (மக்களின்) சம்பளத்தில் தங்களுடைய தனிப்பட்ட வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோலப் பல பணிகளில் நியமிக்கப்பட்டவர்கள் பணிப் போதாமையினால் வேலையற்ற நிலையில் – சும்மா – இருக்கிறார்கள்.

இதேவேளை பல பணிகளுக்கு ஆட்களே போதாமலுள்ளது. குறிப்பாக தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், சில பாடங்களுக்கான ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள் போன்ற பணிகளில். இதனால் மக்களும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். அதே நேரம் பல பணிமனைகளில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் உள்ளனர். இதற்குக் காரணம், பணிச் சேர்ப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளாகும். எந்தெந்தப் பணிகளுக்கு எவ்வளவு பேர் தேவை என்ற மதிப்பீட்டைச் செய்து, அதற்கேற்ப பணிச் சேர்ப்பைச் செய்தால் இந்தக் குறைபாடும் பிரச்சினையும் நேராது.

அதற்குப் பொருத்தமான கல்வித் தகமை, துறைசார் படிப்பு போன்றவை அவசியமாகும். அதற்கமைய பாடசாலை மட்டத்திலிருந்தே மாணவர்களை வழிப்படுத்தவும் அறிவுட்டவும் வேண்டும். அதற்கு முன் பெற்றோருக்கு விழிப்புணர்வுட்டப்படுவது அவசியமாகும்.

படிப்பு அல்லது கற்கை என்பதும் அறிவுட்டல் என்பதும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் வளர்ச்சியோடு, சமூக அபிவிருத்தியையும் அதன் மூலமாகத் தேச வளச்சியையும் நிறைவு செய்வதற்கானதாக அமைய வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதே சிறந்த கல்விக் கொள்கையும் பொருளாதாரக் கொள்கையுமாகும். இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

ஆனால் எமது நாட்டில் துரதிருஷ்டவசமாக அப்படியான நிலை இல்லை. இங்கே பல பாடசாலைகளிலும் மாணவர்கள் மீது விருப்பத்துக்கு அப்பாலான – தேவைக்கு வெளியேயான பாடங்கள் திணிக்கப்படுகின்றன.

இலவச பல்கலை கழக அனுமதியின் போது இவர்களுக்கு வேலை பற்றி உறுதிப்பாடு வழங்கப்படவில்லை.. பட்டதாரிக்கு அரசவேலை எனும் நியமம் இலங்கையில் இல்லை இவர்கள் சமூகத்தைப்பற்றி படிக்க இன்னும் நிறையவே உண்டு. இவர்களுக்கு உத்தியோகம் கிடைத்தால் அடித்தட்டு மக்களை எவ்வாறு நடாத்துவார்கள். உங்கள் சிந்தனையில் நிறையவே மாற்றம் வேண்டும் பட்டதாரிகளே.

அரசாங்கம் எப்போதாவது கூறினார்களா பட்டதாரிகளுக்கு வேலை தருகின்றோம் நிரந்தர நியமங்கள் தருகின்றோம் என்று. வாய்ப்பு கிடைத்தால் மட்டும் போட்டிப்பரீட்சைகளில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு என்று தான் அறிவிக்கின்றார்கள். தற்போதைய வங்குரோத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கே ஓய்வுதியம் கொடுப்பதற்கு திண்டாடுகின்றார்கள். இவ்வாறு திணரும் அரசாங்கம் எவ்வாறு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பார்கள். அதுவும் எத்தனை ஆயிரம் பேருக்கு கொடுப்பார்கள்.

ஏற்கெனவே சகல மாகாணங்களிலும் அதிகளவு உத்தியோகத்தர்கள் மேலதிகமாக கடைமையாற்றுவதாக அரச ஊடகங்களில் கூடியிருந்தார்கள். அப்படியென்றால் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களை 55 வயதுடன் வீட்டுக்கு அனுப்பினால் தான் புதிய நியமனங்களை எதிர் பார்க்கலாம்.

இவர்களைப் பொறுப்புடையோராக, சமூக நிலவரத்தைப் புரியக் கூடியோராக, திறனாளராக, சுயாதீனமுடையோராக மாற்றுவதற்கு அரசும் கல்வி நிறுவனங்களும் தவறியுள்ளன. என்பதால் தான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காத, முகம் கொடுக்க முடியாதவர்களாக ஒரு சமூகம் உருவாகியிருக்கிறது.

இது தன்னைத் தப்ப வைக்கவே விரும்புகிறது. இதனால்தான் பலரும் நாட்டைவிட்டுத் தப்பியோடுவோராக மாறியுள்ளனர். பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நாட்டினராக, சமூகத்தினராக, மனிதர்களாக, இலங்கையர்களை உருவாக்கியுள்ளது.

இந்தப் போக்கும் பண்பும் ஒரு நாட்டுக்கு நல்லதல்ல. உண்மையில், நாடோ, வீடோ நெருக்கடிக்குள்ளானால், அதை மீட்பதற்கு அதனுடைய புதல்வரும் புதல்வியரும் முன் வர வேண்டும். வீட்டை விட்டும் நாட்டை விட்டும் தப்பியோடுவதல்ல. திரைகடலோடித் திரவியம் தேடலாம் தான். அப்படியானால் அவ்வாறு தேடித் திரட்டிய திரவியத்தோடு அவர்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் திரும்ப வேண்டும். அப்படித் தான் பிற நாடுகளில் நடந்துள்ளன.

இரண்டாம் உலகப்போரில் அழிவைச் சந்தித்த யப்பான் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. அதற்காக யப்பானிய மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோட முற்படவில்லை. தேசமாகத் திரண்டு நாட்டைக் கட்டியெழுப்பினர். இப்படிப் பல சமூகங்கள் வரலாற்றில் உள்ளன. ஆனால் இலங்கையிலோ நிலைமை வேறு. இங்கே அரசாங்கமே மக்களைத் தப்பியோடத் தூண்டியது. கடந்த ரணில் விக்கிரசிங்கவின் ஆட்சியில் இது பகிரங்கமாகவே நடந்தது.

ஆக ஒரு பக்கம் நாட்டை விட்டுத் தப்பியோடுவோரையும் படித்தவர்களுக்கு அரசாங்கமே வேலை வழங்க வேண்டுமெனச் சிந்திப்போரையுமே நாடு உருவாக்கியுள்ளது.

அதாவது நாட்டை மீட்போருக்குப் பதிலாக, அதை மூழ்கடிப்போராக. மாற்றங்களை உருவாக்க விரும்பும் அரசாங்கம் இதை மனதில் கொள்வது அவசியம்.

மக்களைப் பாதுகாப்பதென்பது, அவர்களைச் சரியான திசையில் வழிநடாத்துவதேயாகும். அதுவே வேண்டிய மாற்றம். அதுவே தேவையான பணி. அதுவே விடுதலைக்கான, நெரிக்கடியிலிருந்து தீர்வுக்கான வழி

(17ம் பக்கத் தொடர்ச்சி) குமாரதிச நாயக்கவுக்கான பொறுப்பாகும். இது தான் இலங்கையின் இன்றுள்ள யதார்த் தச் சூழல். ஆனாலும் அநுர குமார திசநாயக்கவின் மீதும் அவருடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதும் மக்களுக்கு வலுவான நம்பி க்கை உண்டு. காரணம், அரசாங்கம் முன்னுதாரணமாகத் தனது செலவு களைக் குறைத்திருக்கிறது. வரியை உயர்த்தியுள்ளது. முன்னாள் அமை ச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் களும் கையகப்படுத்தி வைத்திருந்த சொத்துகளை மீட்டிருக்கிறது. சட்ட த்துக்குப் புறம்பான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள் ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் பாதுகாப்புக்கான செலவு தொடக்கம் அவர்களுக்கு வழமையான முறையில் ஒதுக்கப் பட்டிருந்த ஆடம்பர வசதிகள் அனைத்தையும் குறைவாக்கியுள்ளது.

ஜனாதிபதிபதியின் பதவியேற்பு, நாடாளு மன்றில் கொள்கைப் பிரகடன உரைக் கான ஏற்பாடுகள் போன்ற வற்றை எல்லாம் சாதாரணமாகவே எளிமை யாகவே நடத்தி முடித்திருக் கிறார் அநுர. குறிப்பாக கொள்கை விளக்க உரைக்கு வரும்போது பின்பற்றப் படும் சிறப்பு ஏற்பாடுகள் எல்லாவற்றை யும் விலக்கி விட்டார்.

மனித வள இழப்பாகவே உள்ளது. ஆகவே அரசாங்கம் இதைக் கட்டுப் படுத்துவதற்கான மாற்றுப் பொறி முறைகளை உருவாக்க வேண்டியுள் ளது. மாற்றங்களை மக்கள் உணரும் போதுதான் இந்த வெளியேற்றம் தணி யும். இவற்றுக்கு ஏற்ப முதலில் இந்தியாவுக்கான பயணத்தை மேற் கொண்டார் அநுர குமார. பொருளா தார மேம்பாட்டுக்காக இந்தியாவுடன் பல கூட்டுத் திட்டங்களைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. இந்தியப் பயணம் தமக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளது என NPP அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தியாவும் ஏறக் குறைய மகிழ்ச்சியையும் நிறைவையும் வெளியிட்டுள்ளது. இதனுடைய விளைவாக உடனடியாகவே கிழக்கு மாகாணத்தில் 23 திட்டங்கள் ஆரம் பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டி ருக்கிறது. இது போரினாலும் சமூக முரண்பாடுகளாலும் பின்னடைந்திரு க்கும் பிரதேசத்தை மீளக் கட்டியெழு ப்புவதற்கான வாய்ப்பாகும்.

ஆனால், அதை இன முரண்பாடுகள் எழாத வகையில் பாரபட்சங்களுக்கு இடமளிக்காமல் நிறைவேற்ற வேண் டும். இது தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகமாக வாழ்கின்ற மாகாணம். இங்கே அபிவிருத்தித் திட்டங்களை யும் முதலீடுகளையும் மேற்கொள்வது சிறப்பானதே.

இந்தியாவினதும் ஆதரவு கிடைக் குமா என்ற கேள்வி எதிர்க்கட்சிகளு க்கும் மக்களில் ஒரு சாராருக்கும் இருந்தது. ஏனென்றால் இறுக்கமான சில நிலைப்பாடுகளைப் பின்பற்றி வந்த ஜே.வி.பி மைய தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் வெளியுறவில் வெற்றியடையுமா? சர்வதேச சமூகம் தேசிய மக்கள் சக்தியை எப்படி வரவேற்கும் என்றெல்லாம் கேள்விகளி ருந்தன.

ஆனால் ஒரு துடிப்பு மிக்க திறமை யான விளையாட்டு வீரனின் சுறுசுறுப் பான நடவடிக்கைகள் பிறரைக் கவர் வதைப் போல அநுர குமார திசநாயக்க வின் நடவடிக்கைகள் பல தரப்பையும் கவர்ந்துள்ளன. அவர் முயற்சிக்கின்ற அளவுக்கு அவரைச் சுற்றியுள்ள தரப்பு களிடையே மாற்றங்களுக்கான ஒத்து ழைப்புகள் கிடைக்கின்றதா என்பதே தொடர்ந்து கொண்டிருக்கும் கேள்வி யாகும்.

அவர்கள் அரசாங்கத்தை பின்னுக்கு இழுக்கும் விதமாக கட்சி அதிகார த்தை (கட்சிக் கொள்கைகளை) அரசாங்கத்தின் கொள்கைகளாக முழு தாகத் திணிக்க முற்பட்டால் பிரச்சினை உருவாகும். கட்சி, அரசாங்கமா என்பதை அவர்கள் தீர்மானிப்பது அவசியமானது. நாட் டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால்

# வரலாற்றின் எதிர்பார்ப்பு!

அப்படித் தான் இந்தியாவுக்கு ஜனாதி பதி மேற்கொண்ட பயணத்தின் போதும் விசேட ஏற்பாடுகளைப் புறக் கணித்து விட்டுச் சாதாரணமாகவே சென்று திரும்பியுள்ளார். அவ்வாறே முன்னாள் ஜனாதிபதிகளுக்கிருந்த அதி உச்ச வசதிகளிலும் வெட்டு விழுந்தி ருக்கிறது. இதெல்லாம் அநுர குமார திசநாயக்கவின் மீதான மதிப்பையும் நம்பிக்கையையும் மக்களிடத்திலே உயர்த்தியுள்ளன.

ஆக எளிமையான அரசாங்கம் என்ற ஒரு புதிய தோற்றமும் பண்புருவாக்க மும் உருவாக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கப்படுகிறது. ஆனால், இவை மட்டும் மாற்றங்களுக்குப் போதாது. நாட்டுக்கு வருவாயைத் தேடும் வழி களை அரசாங்கம் கண்டறிய வேண் டும். அவற்றை விருத்தி செய்ய வேண் டும். ஊழல் பெருச்சாளிகளாக நாட் டைச் சூறையாடியோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண் டும். அரசியலமைப்பை பொருத்தமான முறையில் பன்மைத்துவத்தின் அடிப் படையில், பல்லினத்தன்மைக்குரியதாக மாற்றியமைக்க வேண்டும். பொருளா தார மறுசீரமைப்புக்கான வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும். வடக்குக் கிழக்கிலிருந்து படைகளைக் குறைக்க வேண்டும். அங்கே மக்களின் நிலங்களைக் கையக ப்படுத்தி வைத்திருக்கும் நிலங்களை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கி விட்டன.

இதில் உடனடியாகச் செய்ய வேண்டி யவற்றை இனங்கண்டு செய்வது அவசியமாகும். அதன் மூலம் மக்க ளிடம் நம்பிக்கையை ஏற்படுத்த முடி யும். மக்களுக்குப் புதிய உற்சாகத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும். அப்படி நம்பிக்கை அளிக்கப்படுமாக இருந்தால் நாட்டை விட்டுத் தினமும் ஆயிரக்கணக்கில் புலம்பெயரும் நிலை யைக் கட்டுப்படுத்தலாம். நாட்டை விட்டு மக்கள் வெளியேறுவதென்பது ஒரு மிகப் பெரிய வளம் வெளியே செல்கிறது என்றே பொருள் கொள்ளப் பட வேண்டும். புலம்பெயர்ந்து செல் வோர், பெரும்பாலும் இளைஞர்களும் உழைக்கும் திறனாளர்களும் பல்வேறு துறைசார்ந்த வல்லுனர்களாகவுமே இருக்கின்றனர். இது மிகப் பெரிய

அடுத்த கட்டமாக நாட்டின் பிற பகுதிகளிலும் இத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்படலாம். அடுத்த பயண மாக சீனாவுக்குப் பயணிக்கிறார் ஜனாதிபதி. சீனப் பயணத்தின் போதும் நிறைவளிக்கக் கூடிய ஏற்பாடுகளோடும் திட்டங்களோடும் அவர் நாடு திரும்பு லாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனா வும் நிறையத் திட்டங்களையும் முதலீடுகளையும் இலங்கையில் மேற் கொள்ளக் கூடும். ஏற்கனவே உள்ள திட்டங்களை விரிவு படுத்த வாய்ப்பு ண்டு.

இந்தியாவையும் சீனாவையும் கையாள் வது இலங்கைக்கு எப்போதும் சவ லான விடயமே. அதே நேரம் இரண் டையும் மிக லாவகமாக இதுவரை யான தலைவர்கள் கையாண்டு வந்தி ருக்கிறார்கள் என்பதையும் நோக்க வேண்டும். அநுரவும் அதைத் தளர் வின்றித் தொடர்கிறார் என்றே தெரி கிறது. அப்படித் தொடர்ந்தால் பயன். முக்கியமாகப் பிராந்திய நெருக்கடி களுக்குள் சிக்காதிருக்கலாம்.

அதேவேளை இலங்கைக்குப் பல வழி களில் நீண்டகாலத் தீமைகளும் உண்டு. குறிப்பாக சுயசார்ப்புப் பொரு. ளாதாரத்தைக் கட்டியெழுப்புவது சவாலானதாகி விடும். இதை எப்படிச் சமாளித்து. தன்னுடைய பொருளா தாரக் கொள்கையை நடை முறைப் படுத்தப் போகிறது தேசிய மக்கள் சக்தி?

அநுரவின் அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களும் நடவடிக்கைகளும் சிறப் பாக உள்ளன என்று பாராட்டுத் தெரி வித்துள்ளன அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகள். அப்படி யென்றால், இது எப்படி மாற்றத்து க்கான அரசாங்கமாக இருக்கும்? மக்களுக்கான ஆட்சியை இதனால் எப்படி வழங்க முடியும்? இடதுசாரி யப் பொருளாதார நோக்கைக் கொண்ட ஆட்சியொன்றுக்கு வெளி யுலகம் எவ்வாறான வரவேற்பை அளிக்கும்? எனவே இது மாற்றம் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கும் ஆட்சி யாகவே இருக்கும் என்கின்றன சில தரப்புகள்.

இப்படி ஒரு வெளி ஆதரவு வட்டமும் எதிர்ப்பு வட்டமும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குக் கிடைத்து ள்ளது. குறிப்பாக மேற்குலகினதும்

ஏற்கனவே கடன் பொறியிற் சிக்கியிரு க்கும் நிலையிலிருந்து மீள வேண் டும். அதில் முக்கியமான ஒன்று சர்வ தேச நாணய நிதியத்துடனான (Agreement with the International Monetary Fund) உடன்படிக்கை யாகும். ரணில் விக்கிரமசிங்க ஆட்சி யின போது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைத் தொடர வேண் டிய நிலை அநுர குமார திசநாயக்க அரசாங்கத்துக்கும் உண்டு. அதைப் புறக்கணிக்க முடியாது. அப்படி யென்றால் IMFவின் நிபந்தனைகள், பரிந்துரைகளையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுமக்க வேண்டும். இது System change ஐ மட்டுப்படு த்துகின்ற ஒரு விடயமாகும். வேறு வழியின்றி, IMF உடனான முதற் சுற்றுப் பேச்சுகளை முடித்திருக்கிறது புதிய அரசாங்கம்.

இப்படித் தான் ஒவ்வொரு புள்ளியிலும் சிக்கல்களும் பிரச்சினைகளும் உள் ளன. ஆனால், சில முடிவுகளில் அரசாங்கம் தீர்க்கமாக உள்ளது. குறிப்பாக இன வேறுபாடுகளுக்கு இட மில்லை என்பதில் உறுதியாக இருப்ப தாகத் தெரிகிறது. கடந்த மாவீரர் நாள் நினைவு கூரல் தொடர்பாக எழுந்த சர்ச்சைகளுக்கு உறுதியும் நிதானமு மான பதில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு கூரலென்பது, இறந்த தமது உறவினரை அவர்களுடைய பெற்றோரும் உறவுகளும் நினைவு கொண்டு அஞ்சலி செலுத்துவதே தவிர, விடுதலைப் புலிகளை நினைவு கொள்வதோ அல்லது அவர்களை மீளெழுச்சி கொள்வதற்கு இடமளிப் பதோ அல்ல என. மட்டுமல்ல, இதை இனவாதமாக மாற்ற முயற்சித்தவர் களின் மீது நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்தது. இந்த மாதிரித் துணிகரமான நடவடிக்கை கள், படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் காணிகளை விடுவிப் பது தொடக்கம் வேறு சிலவற்றிலும் அவசியமாகும்.

அதைப் போல முக்கியமானது, இந்திய வம்சாவழி மக்க ளாகிய மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை. நாளொ ன்றுக்கு 1000 ரூபாய் சம்பளத்தை, தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் தொடர்ந் தும் மறுத்து வருகிறது. 1000 ரூபாய் சம்பளக் கோரிக்கை முன் வைக்கப்

பட்டு 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இடையில் மூன்று ஆட்சிகள் கடந்துள்ளன. இன்னும் அது நடை முறைக்கு வரவில்லை. இடையில் பொருட்களின் விலை பல மடங்கு கூடி விட்டது. அப்படியென்றால் நியா யத்தின்படி இப்பொழுது 2000 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும். மலையகத் தோட்டங்களுக்கு வெளியே நாளொ ன்றுக்கு 2000க்கு மேலே தான் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆகவே இதிலும் ஒரு நிர்ணயமான தீர்மான த்தை அநுர குமார அரசாங்கம் எடுக்க வேண்டும்.

அரசியலமைப்பை மாற்றம் செய்ய வேண்டும் என்றால் அதற்கான வரைபை இப்போதே ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பது அவசி யம். அன்றாடப் பொருட்களின் விலை யேற்றம் என்பது மக்களின் வயிற்றுப் பிரச்சினையாகும். ஆகவே அதற்கு முதலில் தீர்வைக் காண வேண்டும். இதுவரையிலும் ஆட்சியிலிருந்தவை கொழும்புத் தலைமைகள் அல்லது கண்டித் தலைமைகளே. இவை மேற் தட்டு வளவுக்காரர்கள் என்ற வர்க்க த்தைச் சேர்ந்தவை. இப்பொழுது தான் கொழும்புக்கும் கண்டிக்கும் வெளியே, கிராம மட்டத்திலிருந்தவர்கள் ஆட்சி க்கு வந்துள்ளார்கள். எளிய குடும்ப ங்களைச் சேர்ந்தவர்கள் அதிகாரத்து க்கு வந்துள்ளனர். அப்படியென்றால் கிராம மக்களின் பிரச்சினையை நன்றாக விளங்கியவர்களே வந்திருக் கிறார்கள். கிராம மக்களின் பிரச்சினை யில் முக்கியமானது வயிற்றுப் பிரச்சினை —வாழ்வாதாரப் பிரச்சினை யாகும். சாதாரண மக்கள் தமது உழைப்புக்கான ஊதியம், ஊதியத்து. க்கு ஏற்ற செலவு. இதைச் சமன் செய்யக் கூடிய பொரு ளாதார ஏற்பாடு வேணும் என்றே எதிர் பார்க்கிறார்கள். இது இல்லையென்றால் பிறகேன் இந்த ஆட்சி என்றே கிராம மக்கள் சிந்தி ப்பார்கள்.

எனவே இங்கே தீர்வு என்பது பல வகையானது என்ற புரிதல் அவசிய மாகும். ஏற்கனவே ஆட்சியிலிருந்த தரப்புகள் இனப்பிரச்சினையையும் அதன் விளைவான போரையும் முடிவு க்கு தீர்வுக்கு கொண்டு வருவதைப் பற்றியே கூடுதலாகச் சிந்தித்தன.இதிற் கூட இதை அவை நேர்மையான முறையிற் சிந்தித்தனவா என்ற கேள்வி உண்டு. ஆனால், 2009 க்குப் பிறகான சூழல் வேறுபட்டது. அது இனப் பிரச்சினைக்கான தீர்வோடு நாட்டைக் கட்டியெழுப்புவதற்குமாக இருந்தது. குறிப்பாக போரிலே அழி வடைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களையும் அங்குள்ள சமூகத்தினரையும். இப் பொழுது அது இன்னும் விரிவடை ந்து தேசத்தை மறுவாக்கம் செய்ய வேண்டும் என்ற நிலைக்குள்ளாகி யிருந்தது. இப்பொழுது அது மேலும் விரிவடைந்து முழு நாட்டையும் முழுதாக மாற்றத்துக்குள்ளாக்க வேண்டும் என்ற நிலை.

இதை ஒரு புரட்சிகரமான நடவடி க்கையாக முன்னெடுக்க வேண்டும். அதற்கு அரசியற் துணிவு அவசிய மாகும். தேர்தலில் வெற்றியடைவதும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவ தும் சுலபம். அதை சரியாக நிர்வ கித்து, மக்களுக்கான ஆட்சியாக மடை மாற்றம் செய்வது கடினம்.

அதிலும் ஊழலும் அரசியற் கீழ்மை களும் இனவாதமும் வளர்ந்து திரட்சி யடைந்திருக்கும் ஒரு நாட்டில் அதை யெல்லாம் உடனடியாக மாற்றுவது சவாலானது. ஆனால், மக்கள் ஆதரவு என்ற பலத்தோடிருக்கும் தரப்பு, அந்த ஆதரவின் பலத்தில், அது அளித்து ள்ள துணிவில் நடவடிக்கைகளை எடுத்தால், எதிர்பார்க்கப்படும் இலக் கினை எட்ட முடியும். இதற்கான வரலாற்று வாய்ப்பொன்று JVP க்கு NPP க்கு கிடைத்துள்ளது. ஆயுதப் போராட்டத்தின் மூலம் எட்ட முடியாத வாய்ப்பை.(22ம் பக்கம் பார்க்க)

# சிங்கள அரசியலில் புலிப் பொருளாதாரம் சாத்தியமா?

– அழகு குணசீலன் –

இலங்கையின் இன்றைய அரசியல் நிலையும் பொருளாதாரம் சார்ந்த தேர்தல் அரசியல் வாக்குறுதிகளும் கடந்த காலத்தை தவிர்க்க முடியாத வகையில் இரை மீட்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. கூப்பன் அரிசி அரசியல் இலங்கையில் பழைமையும், தொன்மையும் வாய்ந்தது. இன்றைய ஆட்சியிலும் அரிசி அரசியலும், அரிசி பொருளாதாரமும் பேசுபொருளாக உள்ளது.

சந்திர மண்டலத்தில் இருந்து அரிசி கொண்டு வருவோம் என்றார் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

சுதந்திர வர்த்தக வலயம் மூலம் இலங்கையை சிங்கப்பூர் ஆக்குவோம் என்றார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

திருகோணமலையில் இருந்து எண்ணெய் ஏற்றுமதி செய்வோம் என்றார் அநுரகுமார திசாநாயக்க.

இந்த தேர்தல் அரசியல் வாக்குறுதிகளுக்கும், இலங்கை போன்ற ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி கொள்கைக்கும் உள்ள தொடர்பு. அதன் நம்பகத்தன்மை, உண்மையான நடைமுறை ஜதார்த்தம் என்ன?

இலங்கையின் இந்த அரசியல் தலைவர்கள் எல்லோரும் கிழக்காசியாவில் வெற்றி அடைந்த ஒரு பொருளாதார முன்மாதிரியை முன்னிறுத்தி தங்கள் அரசியல் வெற்றிக்கு பலம் சேர்த்தவர்கள். ஒரு காலத்தில் கட்டுப்பாடான மூடப்பட்ட பொருளாதார மாதிரியாகவும், பின்னர் கட்டற்ற திறந்த பொருளாதார மாதிரியாகவும் அது மாறியது.

ஆனால் இவர்கள் இலங்கையில் அந்த அபிவிருத்தி கொள்கைக்கு உந்து சக்தியாக பொருத்தமான உள்நாட்டு அரசியலை செய்ய தவறியவர்கள். இதனால் இவர்களால் தென்கிழக்காசியாவில் குறிப்பிடத்தக்க அரசியல் வெற்றியை மட்டும் அன்றி, பொருளாதார வெற்றியையும் அடைய முடியவில்லை. இன்றைய புதிய மீட்பர்களும் அதே தோல்வி பாதையிலேயே அதே திசையிலேயே வண்டியை திருப்புகின்றனர்.

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், அந்த நாட்டின் உள்நாட்டு அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் இருக்கின்ற தொடர்பு மிகவும் பலமானது. இலங்கையை சிங்கப்பூராக்குவதற்கும், ஏற்றுமதி பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்குமான முதல் நிபந்தனை முக்கிய நிபந்தனை அரசியல் ஸ்திரத்தன்மை. இது பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை கொண்டிருப்பதால் மாத்திரம் சாத்தியமா? இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமை மறுப்புக்கு, பறிப்புக்கு பாராளுமன்ற பெரும்பான்மை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதேயன்றி அரசியல் ஸ்திரத்தன்மைக்காக அல்ல.

சிங்கப்பூராக்குவதற்கு அல்லது தென்கிழக்காசிய நாடுகள் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சியை அபிவிருத்தியை எட்டுவதற்கு அந்த நாடுகளில் நிலவியது போன்ற அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தாமல் அதை சாத்தியமாக்குவது எப்படி? தென்கிழக்காசிய குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா இந்தோனேசியா போன்ற அரசியல், சமத்துவ சமூக பன்மைத்துவ அங்கீகார கட்டமைப்பு இல்லாமல் இலங்கையை சிங்கப்பூர் ஆக்குவது எப்படி?

அதுவும் முப்பது ஆண்டுகள் போர் தின்று துப்பிய பூமியில், அந்த போர்க்கால பொருளாதார வங்குரோத்து நாட்டில் இந்த கேள்வி மிகமிக முக்கியமானது. வியட்நாமில் யுத்தத்திற்கு பின்னரான வளர்ச்சி இதற்கு முன்னுதாரணமாக அமையலாம். இதனால்தான் சிங்க(ள) பேரினவாத அரசியலை செய்து கொண்டு புலிப் பாய்ச்சல் பொருளாதார முன்னேற்றத்தை எட்டமுடியுமா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டி உள்ளது.

தென்கிழக்காசிய பொருளாதார முன்னேற்ற மாதிரிக்கு அபிவிருத்தி



பொருளாதார ஆய்வாளர்கள் சூட்டியுள்ள பெயர் பறக்கும் வாத்துகள் மாதிரி (FLYING GEESE MODEL). இதனை ஆரம்பித்து வைத்தது ஜப்பான். மற்றைய நாடுகள் அதைத் தொடர்ந்தன. இன்னும் சொன்னால் வாத்துகள் கூட்டமாக பறக்கும் போது முதலில் ஒன்று பறக்க மற்றையவை அதற்கு பின்னால் சமாந்தரமான வரிசையில் நெடுக்காகவும், குறுக்காகவும் அழகாக அணி வகுத்து பறக்கும்.

இந்த மாதிரியின் மூலம் வளர்ச்சி கண்ட நாடுகளை புலி நாடுகள் (TIGER COUNTRIES என்பது தென்னாசிய நாடுகளுக்கான குழுப் பெயர். இந்த நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி மிகவும் பலமானதும், விரைவானதுமான ஒரு பாய்ச்சல். இதனால் அபிவிருத்தி பொருளியலாளர்கள் இதனை வலிமையானதும், மிக வேகம் கொண்டதுமான, பாயும் புலிக்கு ஒப்பிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் இலகுபடுத்தினால் பறக்கும் வாத்து மாதிரி மூலம் அடைந்த பாயும் புலி பொருளாதார அபிவிருத்தி.

ஜப்பானை தொடர்ந்து தென்கொரியா, தைவான், ஹொங்கொங், சிங்கப்பூர் என்பன முதல்வரிசையில் குறிப்பிடக்கூடியவை. அடுத்த வரிசையில் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சீனா. மூன்றாவது வரிசையில் வியட்நாம், இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம். இந்த நாடுகளில் எல்லாவற்றிலும் ஒரேமாதிரியான அடைவை அந்த நாடுகள் பெறவில்லை என்பது வெளிப்படை.

இதற்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய முக்கிய காரணங்களுள் ஒன்று உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மை. இந்த அனுபவங்களை, உண்மைகளை புறம் தள்ளி, சிங்க(ள) அரசியலை செய்து கொண்டு புலிப் பொருளாதாரப் பாய்ச்சலை எட்டமுடியாது. என்.பி.பி. அரசாங்கம் பேசுகின்ற இலங்கையர்" அரசியல் சமூகக் கோட்பாடு ஒரு சிங்க(ள) அரசியல் கோட்பாடு. இதனூடாக புலிப்பாய்ச்சல் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு சாத்தியமற்ற தடையாக அமைகிறது. அமெரிக்க ஆதிக்க யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வியட்நாம் பறவை காய்ச்சல், ஆசிய பொருளாதார மந்தம் என்பனவற்றிற்கு மத்தியிலும் 2022 இல் 6வீத உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பை காட்டியது. கடந்த 2024 இல் 7 வீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பு என்கிறார்கள். மசகு எண்ணெய், ஆடை காலணி, கடல் உணவு, மின்னியல் பொருட்களின் உற்பத்தியில் வியட்நாம் முன்னணியில் உள்ளது. ஆசிய பசுபிக் பிராந்திய 39 நாடுகளில் வியட்நாம் 11 வது இடத்தில் இடம் பிடித்திருப்பதை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

இந்த பிராந்தியத்தின் குறைந்த மூல வளங்கள், குறைந்த நிலப் பயன்பாடு, எழுதவாசிக்கத் தெரியாதோரின் உயர்ந்த வீதம் என்பனவற்றிற்கு மத்தியிலும் இறக்குமதியை கட்டுப்படுத்தி அதற்கு பதிலீடான இலகு மின்னியல் பொருட்கள் உற்பத்தியில் முதலீடு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இந்த நாடுகளின் தொழிலாளர்கள் இந்த இறக்குமதி பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதார முறைக்கு மாறும் காலத்தில் அதிக விலை கொடுக்க வேண்டி இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

குறைந்த சம்பளம், குறைந்த தொழிலாளர் சமூக பாதுகாப்பு, தொழிற்சங்கங்கள் இன்மை போன்ற பாதிப்புக்களை விசேட உற்பத்தி வலையங்களில் தொழிலாளர்கள் எதிர்நோக்கினர். இன்று இந்த நிலைமைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு ஏற்றுமதி பொருளாதாரம் அவர்களின் வாழ்வில் வருமானத்தை அதிகரித்ததால் வாழ்க்கையில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலை அந்த பிராந்தியத்தின் புலி பாய்ச்சல் பொருளாதார நாடுகள் பலவற்றிற்கும் பொருத்தமானது.

சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இந்தியா போன்ற இந்த நாடுகளில் பன்மைத்துவ மொழி, மத, கலாச்சார பண்பாட்டு இனக் குழுமங்கள் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இடையே ஒரு புரிந்துணர்வையும், இன, மத நல்லிணக்க அங்கீகாரத்தையும் ஏற்படுத்துவதில் அந்த நாடுகளின் அரசாங்கங்கள் முன் நிற்கின்றன.

ஏனெனில் இந்த பன்மைத்துவம் பாதுகாக்கப்படவில்லை என்றால் அது அந்த நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். வெளிநாட்டு தொழிலாளர், முதலீடு, முயற்சியாளர் பாய்ச்சலில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இவை மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப்பொருளாதார மாதிரியில் முக்கிய நிபந்தனையாகிறது. இன்னொரு வகையில் சொன்னால் இன்று இடதுசாரி அரசாங்கங்கள் பேசுகின்ற அரச தலையீட்டுடன் கூடிய சமூக முதலீட்டு மாதிரிக்கும் இவை முன் நிபந்தினையானவை.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளில் உள்நாட்டு கிளர்ச்சிக்குழுக்கள் உண்டு. அதே போல் தைவான், ஹொங்கொங், தென்கொரியா போன்ற வற்றிலும் பிராந்திய பூகோள அரசியல், இராணுவ நெருக்கடிகள் உண்டு. தாய்லாந்தில் உள்நாட்டு கட்சி அரசியல் ஸ்த்திரமாக இல்லை. அப்படியிருந்தும் அந்த நாடுகள் இந்த புலிப்பாய்ச்சலை எப்படி எட்டின. முக்கியமான காரணம் சமூகங்களுக்கு இடையிலான உறுதியான பன்மைத்துவ உறவு. ஒன்று மற்றொன்றை அங்கீகரிப்பதன் அதிசயம். அடிப்படை ஜனநாயக அரசியல் பாதுகாப்பு.


பன்மைத்துவ சமூக கட்டமைப்பு ஒரு வளக்கொடை. இலங்கை சிங்க(ள) அரசியல் கருதுவது போன்று பன்மைத்துவம் ஒரு தடையல்ல. அந்த பன்மைத்துவ சமூகவளத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதிலேயே இது தங்கியிருக்கிறது. சிங்கப்பூர் அதை சரியாக இனம்கண்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அதை பயன்படுத்துகிறது. அதற்கான சமூக, பொருளாதார, அரசியல் வெகுமதியை அந்த பன்மைத்துவ சமூகங்களுக்கு இடையே பங்கிட்டுக்கொள்கிறது. சிங்கப்பூரில் 75 வீதமான சீனர்களும், 13 வீதமான மலாயர்களும், 9வீதமான இந்தியர்களும் வாழ்கிறார்கள். இவர்களில் தமிழர்கள் குறிப்பிடக்கூடிய தொகையினர். இதை விடவும் பாகிஸ்தான், இலங்கையை சேர்ந்தவர்களும் அங்குண்டு.

சிங்கப்பூர் சமூக ஒருங்கிணைவு அரசியல் கொள்கையானது அங்கு அந்த வாய்ப்பை வழங்குகிறது. சிறுபான்மையினர் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பதவிகளை வகிக்க முடிகிறது. இது அங்கு வாழ்கின்ற சமூகங்களுக்கு வழங்கப்படுகின்ற மிகப் பெரும் அங்கீகாரம். அவர்கள் பௌத்தர்களாக, முஸ்லீம்களாக, கிறிஸ்தவர்களாக, இந்துக்களாக தங்கள் கலாச்சார சுதந்திரத்துடனும், சட்டரீதியான சீன, மலாய், தமிழ், ஆங்கில மொழி பயன்பாட்டு அடிப்படை ஜனநாயக உரிமையுடனும் வாழமுடிகிறது. இது சிங்கப்பூரின் பொருளாதார பாய்ச்சலுக்கான அத்திவாரத்தை வழங்குகிறது. அவர்கள் தங்களை தாங்களாகவும், சிங்கப்பூர் நாட்டவர்களாகவும் உணர்கிறார்கள். இலங்கையை போன்று இனம், மதம் இல்லை இலங்கையர் என்பதே ஒன்று என்று வலிந்து திணிக்கும் சிங்க(ள) அரசியல் அங்கு இல்லை. இது சிங்கப்பூரின் பொருளாதார பலத்தின் அடிப்படையாக அமைகிறது.


இலங்கையில் இது முற்றிலும் முரணானது. சிறுபான்மை தேசிய இனங்களின் இருப்பு, பன்மைத்துவ சமூக கட்டமைப்பு பேரினவாத வளர்ச்சிக்கு ஒரு தடையென்று சிங்க(ள) அரசியல் கருதுகிறது. இதனால் பன்மைத்துவத்தை மறுத்து நிராகரித்து சிறுபான்மை தேசிய இனங்களை விழுங்கிய ஒரு தனி இராட்சத சிங்கமாக தன்னை அடையாளப்படுத்துவதில் அது அனைத்து வழிகளிலும் முயற்சிக்கிறது.

(22ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கவுரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும் வாங்கும் போதும் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், இருக்கும்





மிதுனராசி அன்பர்களே! அதிமுக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.




கடகராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்





சிம்மராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். பயண செலவு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்





துலாம்ராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்





விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் இருந்த குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சனைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்யவேண்டி இருக்கும்..




மகரராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதூரியம் கூடும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றமான நிலை காணப் படும். வியாபார நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சிங்கள அரசியலில் புலிப் பொருளாதாரம்...

(21ம் பக்கத் தொடர்ச்சி) கிளீன் சிறிலங்கா கூட அந்த திசையை நோக்கியே பயணிக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொருளாதார வங்குரோத்து அடைந்த ஒரு நாட்டை கட்டி எழுப்ப துரித பொருளாதார சீர்திருத்தங்கள், கொள்கைகள் அவசியம். இலங்கையில் பொருளாதாரத்தை வீழ்த்தியது இனநெருக்கடியும், அதனால் ஏற்பட்ட உள்நாட்டு போரும் என்பதை இரண்டாம், மூன்றாம் நிலைக்கும் அப்பால் தள்ளிவிட்டு கட்சி பிரச்சார அரசியலை முன்னெடுப்பது பொருளாதார மேம்படுத்தலுக்கு உதவாது .

இந்த என்.பி.பி. அரசாங்கம் முதல் பாராளுமன்ற அமர்விலேயே செய்திருக்க வேண்டியது, பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக முன்மொழிந்து புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளையும், அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் முடுக்கி விட்டிருக்க வேண்டும். அதை தவிர்த்து தட்டிக் கழித்து காலத்தை கடத்தி தற்போதைய சாதகமான அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தாமல் இழுத்தடிப்பது இந்த ஆட்சியாளர்களின் இறுதி ஆண்டிலும் புதிய அரசியலமைப்பு ஒன்று வருமா? அப்படி வந்தாலும் அது இனப்பிரச்சினைக்கு தீர்வைத் தருமா? என்று சந்தேகிக்க வழி வகுக் கிறது.

ஒரு புதிய அரசியலமைப்பு ஆயத்தப்படுத்தலுக்கு அதிக காலம் தேவை. அது அமைச்சரவை, பாராளுமன்ற அங்கீகாரத்தை பெறவேண்டும். அது சாத்தியமானால் அரசாங்கத்தின் கூற்றின்படி சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். இந்த நீண்ட புதிய அரசியல் அமைப்பு வழிப்பயணம் அரசாங்கத்திற்கு இலகுவானதாக இருக்கப் போவதில்லை. அதுவும் இழக்கப்படுகின்ற ஒவ்வொரு பொழுதும் இந்த அரசாங்கத்திற்கு எதிரானதாகவே அமைய வாய்ப்பு இருக்கிறது. அதுவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்த எதிர்ப்பு பன்மடங்காக இருக்கும். ஜனாதிபதி சந்திரிகா தீர்வு பொதி, ஜனாதிபதி சிறிசேன கால நல்லாட்சி அரசியல் அமைப்பு மாற்றம், ராஜபக்சாக்களின் ஆட்சி காலங்கள் எல்லாம் இந்த சந்தேகத்திற்கு வலுச்சேர்க்கின்றன.

என்.பி.பி. ஜே.வி.பி.க்கு இடையே முரண்பாடுகள் வெளிப்படத் தொடங்கி விட்டன. பிரதமர் நியமனம், சபாநாயகர் நியமனத்தில் ஆரம்பித்த இந்த உள்மோதல் தொடர்கிறது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மௌனம் சாதிக்கின்ற அளவுக்கு நிலைமை கட்சிக்குள் அமைதியாக இல்லை. உள்ளுக்குள் அதிகார, பதவிப் போட்டி நிலவுகிறது. அதிகாரிகளை வழிக்கு கொண்டு வர முடியாமல் அமைச்சர்கள் தவிக்கிறார்கள். ஊடகங்கள் எச்சரிச்கப்படுகின்றன.

யாருக்கு சிறைத்தண்டனை, யாருக்கு விடுதலை என்று நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியதை அமைச்சர்கள் தீர்மானித்து பேசுகின்றனர். ஒருவரின் கருத்து இனவாதமா? இல்லையா? என்பதை நீதி மன்றம் தீர்மானிக்க வேண்டும் . பிரதமரும், சுட்டு விரலைக் காட்டி எச்சரிக்கும் சில அமைச்சர்களும் அல்ல. இது கருத்துச் சுதந்திரம் சார்ந்தது. ஐ.எம்.எப், இந்திய, சீன, அமெரிக்க உறவில் அரசாங்கத்திற்குள் முரண்பாடு உண்டு. இந்த சூழலில் புதிய அரசியலமைப்பு ஒன்றை எதிர்கட்சி மட்டும் அல்ல அரசாங்க தரப்பிலும் ஒரு பகுதியினர் குறிப்பாக இனப்பிரச்சினைக்கான சரத்துக்களை அங்கீகரிப்பார்களா? என்ற சந்தேகம் வலுக்கிறது. இழுத்தடிப்பு நிலைமையை இன்னும் மோசமாக்கும்.

இனப்பிரச்சினைக்கு சகல தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு இன்றி சிங்க(ள) அரசியல் முனைப்பு ஒரு போதும் இலங்கையை சிங்கப்பூராக்கப் போவதில்லை. தென்கிழக்காசிய புலி பொருளாதார பாய்ச்சல் என்பது வெறும் விருப்பமே அன்றி ஜதார்த்தம் அல்ல. இதை சாத்தியமாக்காமல் வளமான வாழ்க்கை, அழகான நாடு யாருக்கு? மக்களுக்கா? அல்லது ரட்ட அநுரட்டத?

# வரலாற்றின் எதிர்பார்ப்பு

(25ம் பக்கத் தொடர்ச்சி) தேர்தல் மூலம் பெற்றுள்ளது. அதை அது சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வரலாற்று வாய்ப்பைப் பயன்படுத்தி, வரலாற்றை உருவாக்க வேண்டும். அநுர குமார திசநாயக்க வரலாற்று நாயகர் என்றால், அவர் தடைகளைத் தாண்டவும் உடைக்கவும் வேண்டும். அரசியல் என்பது ஓயாத தடைதாண்டலும் ஓயாத முன்னேற்ற நடவடிக்கையும்தான். அதைச் செய்யாத தரப்புகள் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்ளேயே செல்லும். அதைச் செய்யும் தரப்புகள் வரலாற்றின் மேற்படியில் ஏறிச் செல்லும்.

# எடுகோளின் அடிப்படையிலான முடிவு

(8ம் பக்கத் தொடர்ச்சி0) தானே அடுத்தகட்ட நகர் வாக அமைய வேண்டும். அதற்கான மக்கள் ஆணையும் அதற்குத் தேவையான சட்டங்களையும் தீர்மானங்களையும் நிறைவேற்றக்கூடிய பாராளுமன்றப் பெரும்பான்மையும் அரசியலமைப்பின் ஒரு அங்கமாக 1987இலிருந்து இன்று வரை கடந்த 38 வருடங்களாக இருக்கின்ற 13ஆவது திருத்தத்தை அமுல்செய்யும் நிறைவேற்று அதிகாரமும் கடப்பாடும் தற்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு உண்டல்லவா?

முறைமை மாற்றம் என்பது 13ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்தையும் உள்ளடக்கியது தானே. இதற்காகத் தானே பாரம்பரியத் தமிழ்த் தேசியக் கட்சிகளையெல்லாம் புறந்தள்ளி வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வழக்கத்திற்கும்மாறாகப் பெருவாரியாகத் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். எனவே இப்பத்தியின் முதற்பந்தியிலே பதிவிட்டதாகக் கூறப்பட்டுள்ள அன்பரைப் போன்று எடுகோள்களின் அடிப் படையில் மட்டும் நம்பிக்கை கொள்ள ாது அவரைப் போன்றவர்கள் தாம் நம்பிக்கை கொண்டுள்ள அரசாங்கத் திற்கும் இது விடயத்தில் அழுத்தங்களைப் பிரயோகிக்க அணி திரள வேண்டும்.

# கிளீன் ஸ்ரீலங்கா:- பொதுக் கழிப்பறைகள்

(15ம் பக்கத் தொடர்ச்சி) இருக்கவில்லை. பதிலாக கைபேசி டோர்ச் லைட்டுகளைப் பயன்படுத்தினார்கள். வாகனத்தின் இலக்கத்தையும் ஏனைய விபரங்களையும் பதிய வேண்டும் என்று கூறி சாரதியை இறக்கிக் கொண்டு போனார்கள்.கைபேசியின் டோர்ச் லைட் வெளிச்சத்தில் பதிந்தார்கள்.அப்பொழுது சாரதி கேட்டார்,ஏன் உங்களிடம் டோர்ச் லைட் இல்லையா? இந்தக் கைபேசி டோர்ச் லைட்டை வைத்துக் கொண்டு கள்ளர்களை எப்படிப் பிடிப்பீர்கள்? ” என்று. அதற்கு ஒரு போலீஸ்காரர் தமிழில் சொன்னார் “துப்பாக்கி வைத்திருக்கிறோம் சுட்டுப் பிடிப்போம் ” என்று. கிளீன் சிறீலங்கா?

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation*
*• Funeral & Memorial Service*
*• Reception*
*• Burial • Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# ஸ்ரீதரனின் தமிழ்நாட்டுப் பயணத்தைத் தடுக்க சுமந்திரன் சூழ்ச்சி செய்தாரா?

தனக்கு எதிராக போலியான பிரசாரங்களை பரப்பும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் 21 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்வடாறு குறிப்பிட்டார்.

கடந்த 10ஆம் திகதி தமிழ்நாட்டில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நான் இந்தியாவுக்கு பயணமாகியிருந்தேன். எனினும், எனது கடவுச் சீட்டுக்களில் பிரச்சினை இருப்பதாக தெரிவித்து என்னை விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

விமானம் புறப்படத் தயாராக இருந்த நிலையில் எனது கடவுச்சீட்டில் குறைபாடு உள்ளதாகவும், பயங்கரவாத குற்றத் தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் விசாரணைகளுக்கு என்னை உட்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் எனக்கு பயணத்தடை விதிக்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

எனினும் என்னுடன் குறித்த மாநாட்டிற்கு வருகைத் தந்த சக நாடாளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீமின் சில முயற்சிகளுக்குப் பிறகு இறுதி நேரத்தில் பயணிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நீதிமன்ற கட்டளைகள் ஏதுமின்றி, சபாநாயகரின் ஆலோசனை ஏதுமின்றி எனக்கு பயணத்தடை உள்ளது என்று அதிகாரிகள் குறிப்பிட்டமை திட்டமிட்ட வகையிலான சிறப்புரிமை மீறல் என்றே நான் கருதுகின்றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான எனக்கு எதிரான அடிப்படை சிறப்புரிமை மீறல் தொடர்பில் நான் கேள்வி எழுப்ப விரும்புகின்றேன்.

அத்துடன் இதன் பின்னணி தொடர்பிலும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இலங்கையில் தடை செய்யப்பட்ட, கனடாவில் இருந்து இயங்கும் அமைப்புடன் சிறீதரன் பேச முனைந்ததாகவும், அதற்காகத் தான் அவர் சென்னை செல்ல இருந்ததாகவும், இதன் காரணத்தினால் தான் சிறீதரனை தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதாகவும்” குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், சென்னையில் என்னைப் பார்த்த சுமந்திரன் இது குறித்து எதுவும் கூறவில்லை. ஆனால், விசாரித்து அறிந்த போது தான் ஊடகங்களில் இவ்வாறு செய்திகள் வந்ததை வைத்து கூறியதாகவும், இது போன்ற ஊகத்தால் விமான நிலையத்தில் சிறீதரனை தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்த அஸ்மின், தன்னுடைய முகநூலில் இட்டுள்ள ஒரு பதிவில், நானும், இந்தியாவின் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் இருக்கும் ஒரு புகைப்படத்தை வெளியிட்டு, கடந்த நாட்களில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்படவில்லை. அது ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தி என்று குறிப்பிட்டுள்ளார்.

சுமந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்கும், அஸ்மினின் முகநூல் பதிவிற்கும் இடையில் தொடர்பிருப்பதாக நான் நம்புகின்றேன். அவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். என்னை சென்னை செல்ல விடாமல் செய்ய மேற்கொள்ளப்பட்ட சதியாகவே இதை கருதுகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்ற சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க சிறீதரன் எம்.பியின் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவைத் தலைவர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம், பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும், குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. எஸ். சிறீதரன் சம்பந்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார். பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசாங்கத்தின் கொள்கை அல்லது விஞ்ஞாபனத்தின் ஒரு பகுதி அல்ல, ஆனால் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை அது அவதானத்துடன் பயன்படுத்தப் படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் செய்வதிலிருந்து குடிவரவு அதிகாரிகள் பயணத் தடையை காரணம் காட்டி தடை செய்யப்பட்டதாக ஹக்கீம் இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார். அத்தகைய தடைக்கு நீதிமன்ற உத்தரவு தேவை என்றும், அது நடைமுறையில் இல்லை என்றும் ஹக்கீம் வாதிட்டுள்ளார்.

குறித்த விடயத்துக்கு பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறீதரன் எம்.பி.க்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும் இந்த சம்பவத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது என்றும் எனவே, இது அரசாங்கத்தின் முடிவும் அல்லது கொள்கையினால் ஏற்பட்ட சம்பவம் அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார்.





# எக்னாலிகொட - எருமைத்தீவு காளியும் கண்ணகியும்

முள்ளிவாய்க்கால் முடிந்து முதல் பொங்கல். பத்து நாட்களை கடந்து இருந்தது. வழமை போல் தமிழ்த் தேசிய தலைமை சம்பந்தர் பொங்கல் பிரகடனம் செய்திருந்தார். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஜனாதிபதி தேர்தலில் போர்த்தளபதி சரத் பொன்சேகாவை தமிழ் மக்களை ஆதரிக்க கோரும் தமிழ்த்தேசிய வரலாற்றுக்கு தார் பூசிய முட்டாள் தனமான முடிவை தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல் எடுத்திருந்தது.

இந்தச் சூழலில் இலங்கையின் பிரபல அரசியல் பத்தி எழுத்தாளரும், கேலிச் சித்திர வரைஞருமான பிரகீத் எக்னாலிக்கொட காணாமல் போனார். இது நடந்தது 24.01.2010 இல். அன்று காலை வேலைக்கு போனவர் மாலையில் வீட்டுக்கு திரும்பி வர வில்லை. இரு நாட்கள் கழித்து 26.01.2010இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருக்கையில் இது நடந்தது. இது நடந்து இன்று சரியாக பதினைந்து ஆண்டுகள் பறந்து விட்டது. காணாமல் ஆக்கப்பட்ட போது பிரகீர்த்க்கு வயது 50.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்து அலசும் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை தேர்தலில் இராணுவத்தளபதி சரத்பொன் சேகாவுக்கு சாதகமாக இருந்ததாக கூறப்படுகிறது. அதுவே அவரின் கடத்தலுக்கும் காரணமாக சந்தேகிக் கப்படுகிறது.

அப்போது இறுதிப் போரில் வெற்றி பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியில் இருந்தார். ஜனாதிபதியும், இராணுவத்தளபதியும் போர் வெற்றிக்கு யார் காரணம் என்று உரிமை கோரி மக்களிடம் அங்கீகாரம் கோரிய தேர்தல் இது. இறுதிப்போரை இன அழிப்பு என்று கூறிய தமிழ்த்தேசியம், அதன் முக்கிய பங்காளிகளுள் ஒருவரான சரத் பொன்சேகாவை ஆதரித்தது.

பிரகீத் சந்தியா தம்பதிகளின் இரு மகன்கள் அரசியல் அகதிகளாக சுவிஸில் வாழ்கிறார்கள். இளையவன் ஹரீத், மூத்தவன் சஞ்ஜயா. ஊடகம் ஒன்றுக்கு தகப்பன் பிரகீர்த் குறித்த நினைவுகளை அவர்கள் வழங்கியிருந்தார்கள் . அவற்றில் சில வரிகள்.!

ஹரீத்: அவர் காணாமல் போன நாள் என் நினைவில் நிலைத்து நிற்கிறது. நான் நித்திரையில் இருந்து விழித்த போது வீடு நிறைய ஊடகவியலாளர்கள். என்ன நடந்தது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அம்மா சொன்னார் அப்பாவை காணவில்லை என்று.

அப்போது எனக்கு வயது 12. இதன் தாக்கங்களை முழுமையாக என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கு ஒரு ஸ்காட் போட்- 'SKATE BORD' வேண்டும் என்ற விருப்பத்தை அவருக்கு சொல்லியிருந்தேன். அதற்கான பணத்தை சேமிப்பதற்காக வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு நடந்தும் சென்றிருக்கிறார். இத்தனைக்கும் அவரின் காலில் சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டிருந்தது.

சஞ்ஜயா: எனக்கு அப்போது 15 வயது. அது தான் அப்பாவையும், அம்மாவையும் நான் ஒன்றாக பார்த்த கடைசிக் காட்சி. அன்று அவர் வீட்டை விட்டு போகும் போது எனது ரீ சேர்ட்டை அணிந்திருந்தார். அவர் இரவு வீட்டுக்கு வராததால், அம்மா முழு இரவும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தார். தொடர்பு கிடைக்கவில்லை. நண்பர்கள், உறவினர்களை விசாரித்தார் பலன் இல்லை. அவருடைய கட்டுரைகளை எனக்கும் வாசித்து காட்டுவார். வீட்டுக்கு வரும் நண்பர்கள், உறவினர்களுடன் அவர் விவாதிக்கும் போது நானும் உடன் இருந்திருக்கிறேன்.....

பிரகீத் காணாமல் போனது தொடர்பாக அவரது மனைவி பொலிஸில் முறையிட்டபோது "இன்றைய நிலையில் இது சர்வசாதாரணம்" இப்படி கூறியது பொலிஸ். அவர் கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தன்னை சிலர் பின்தொடர்வதாக உணர்வதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும் தனது நண்பர்களுக்கு பிரகீத் சொல்லியிருக்கிறார்.

2012இல் இந்த வழக்கு பல்பக்க அழுத்தங்களால் முடுக்கி விடப்பட்ட போதும் தரவுகளின் போதாமை என்று கூறி தொடரப்படவில்லை.

2019இல் நல்லாட்சியில் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போதும், சந்தேக நபர்களான இராணுவத்தினர் கைது செய்யப்பட்டும், அவர்கள் அனைவரும் விரைவில் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் தகவல்களின்படி இதுவரை உலகில் சுமார் 100 ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். இதில் அரை வாசிப் பேரின் கடத்தலுக்கும், காணாமல் போதலுக்கும் அரசாங்கங்களே பொறுப்பு என்று அறிக்கையிடப் பட்டுள்ளது. இலங்கையில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் தொகை இத்தொகையை நெருங்குகிறது.

அண்மையில் கடற்படையை சேர்ந்த ஒருவர் கடத்தப்பட்ட பிரகீத் எக்னாலிகொட கடத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு எருமைத்தீவில் அவரது சடலம் வீசப்பட்டதாக கூறியிருந்தார். மட்டக்களப்பிலும் பலர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் உடல்களும் எருமைத்தீவில் புதைக்கப்பட்டு அல்லது வீசப்பட்டு இருக்க கூடும் என சந்தேகங்கள் எழுந்துள்ளன.

குறிப்பிட்ட கடற்படைவீரரின் கருத்தின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வது மட்டுமன்றி எருமைத் தீவிலும் புதைகுழிகளும், வேறு மனித எலும்புக்கூடுகளும் உண்டா? என்பதை ஆராய்ந்து பொறுப்புக் கூற வேண்டிய பொறுப்பை- கட்டாயத்தை அரசாங்கம் தட்டிக்கழிக்க கூடாது. எருமைத்தீவும் 'கிளீன்' செய்யப்பட வேண்டாமா.....?

பிரகீத்தின் மனைவி, சந்தியா பிரகீத் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக செயற்படுகிறார். அவருக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக ஹரீத், சஞ்சயா இருவரையும் கண்காணித்தையும், அரசாங்கம் கடத்த திட்டமிட்டதையும் அறிந்தே இருவரும் தப்பித்து சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

இது தனது தாயின் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஆட்சியாளர்களிடம் இருந்து தங்கள் குடும்பத்திற்கு நீதி கிடைக்குமா? என்ற கேள்விக்கு அவர்கள் இன்றைய ஆட்சியிலும் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை. அன்றைய சட்டமா அதிபர் மோகன் பீரிஸ் ஐ.நா. சித்திரவதைகளுக்கு எதிரான குழுவில் தோன்றி சாட்சியமளித்தார். அதில் பிரகீத் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்று வாழ்கிறார் என்று கூறியிருந்தார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரகீத் பிரான்ஸில் இருக்கிறார் என்றும் தனக்கு தெரிந்த நண்பர் ஒருவருடன் அவர் காணப்பட்டார் என்றும் கூறியிருந்தார்.

இந்த அரச தரப்புக் கருத்துக்கள் பற்றியும் குறிப்பிட்ட பத்திரிகை அவர்களிடம் கேள்வி எழுப்பியது. இவை அரசாங்கத்தின் பொய்யான கண்டு பிடிப்புகள். இலங்கை ஊடகங்களினதும், அரசாங்கத்தினதும் பொய்களுக்கு நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம் என்கிறார்கள் அவர்கள்.

உங்கள் தந்தை இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று நம்புகிறீர்களா?

இல்லை. கடத்தப்பட்டு மறுநாளே அவர் கொலைசெய்யப்பட்டுவிட்டார். அவரைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது உங்களுக்கு பெரும் மனத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் அல்லவா? சடலத்தை கண்டு பிடிப்பது இனியும் எங்களுக்கு முக்கியம் இல்லை. எங்களுக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்படவேண்டும் அதுவே எங்களுக்கு முக்கியம் என்கிறார்கள் பிரகீத்தின் பிள்ளைகள்.

தங்கள் தாய் தென்னிலங்கையில் மட்டும் அன்றி வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் இணைந்தும் இந்த அநீதிக்கு எதிராக போராடுகிறார் என்று கூறும் அவர்கள் காளி, கண்ணகி தெய்வங்கள் மீதான நம்பிக்கையால் நேர்த்தி வைத்து நீதி கேட்கிறார் என்றும் அந்த நேர்காணலில் கூறியிருக்கிறார்கள்.

அவர்களின் நேர்காணலை படித்த போது கண்ணகி -கோவலன் கதை மனதில் தோன்றியது. பாண்டிய மன்னன் தவறான முடிவை எடுத்து கோவலனை கொன்றபோது கண்ணகி அதற்கு நீதிகேட்டு போராடினாள். மன்னனும், மனைவி கோப்பெருந்தேவியும் மாண்டு போனார்கள் என்கிறது சிலப்பதிகாரம்.

இலங்கையில் அரசியல் பிழைத்தமைக்காக ஆகக் குறைந்தது மக்களிடம் மன்னிப்பு கேட்ட அரசர்கள் - அரசிகள் உண்டா ? எத்தனை பேர்?

இன்றைய அநுர ஆட்சி கண்ணகிகளுக்கு வழங்கப் போகின்ற நீதி என்ன?